KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ ஆகஸ்ட் ௴ 31௳ [No. 34

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 629
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 631
3. அமீல் (Henri Frederic Amiel) T. R. இராஜகோபால் 633
4. தமிழ்ப் பாடம் அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை 635
5. மானத சாத்திரம் (Psychology) வித்வான் T.P. மீனாக்ஷிசுந்தரம், M.A.B.L. 637
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 8-ம் தசகம்). K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 639
7. காற்றுமழை (அங்கம் 3. களம் 3.) Shakespeare's Tempest 641
8. கலித்தொகை (பாலைக்கலி, 23) T. A. கனகசபாபதி முதலியார் 643
9. வர்த்தமானம் 644

கலாநிலயம்

புதுப் பிறவி.

சித்திரம் சிற்பம் காவியம் நாட்டியம் சங்கீதம் அனையவை கலைகள் ஆவதை யாவரும் அறிவார். மற்று, வாழ்வாங்குவாழ்கின்ற மனிதவாழ்க்கையே, எல்லாக் கலைகளையும் முழுமையிற் றழுவிய ஓர் கலையாகும் என்பதை அறியவல்லார் மிக மிகச் சிலர். 'வாழ்க்கை நாடகம்' என்று கூறுவார் உளர். எனினும், நடிக்கப் படுவது நாடகம் என்னும் நினைவால் அது வழங்கப் படுகின்றதே யன்றி, கலையின் பொலிவை வாழ்க்கை யோடு சேர்த்த செம்மையால் இச்சொல் நிகழ்கின்ற தென்று எண்ணற்கு இடமில்லை. ஏனெனில், "வாழ்க்கை நாடகம்" (drama of life) என்னும் இவ்வழக்கோடு "வாழ்க்கை விளையாட்டு" (game of life) என்னும் ஒரு வழக்கும் கலந்து கலந்து உலகில் வழங்கப் பெறுவதே, வாழ்க்கையை நாடகம் என்னுங் கலையெனக் கொள்ளாமல் நடிப்பதென்னும் விளையாட்டுத் தொழிலாக மனிதர் விவகரிக்கின்றதன்மையை விளம்பிவிடும். பெருநிலவரைப்பே அரங்காக, குழவி முதல் முதுமை ஈறாக வுள்ள பருவங்கள் பற்பல அங்கங்களாக, கழிக்கின்ற ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காட்சியாக நிகழ்கின்ற இந்நாடகம், வெறுங் கூத்தெனக் கொண்டால்மிகவும் இரங்குதற்குரியதாயிருக்கின்றது. எவரெவர் ஆடும் நாடகங்களிலும் எல்லோரும் பாத்திரங்கள்; எல்லோரும் எல்லா நாடகங்களையும் பார்க்கின்றவரு மாகின்றார். பாத்திரங்களாகத் தாமோர் நாடகத்தில் நடித்துக்கொண்டே, மற்றவர்கள் ஆடுகின்ற நாடகங்களைப் பார்ப்பவரு மாகின்ற இந்தச் சூழ்ச்சி கருதுங்கால் சிரிப்பதற் கேற்றதாய் நிற்கின்றது.

ஒன்றிங்கு உணரவேண்டும். சுவையற்ற பாகங்களை ஒத்திக்கை பார்த்துக்கொண்டிருப்பதே மானுட வாழ்க்கை நாடகம் ஆகிவிடும் என்று கருதலாகாது. வழிவழி யாவரும் ஒழுகியவாறே தாமும் தம் கடவநாள் கழித்துழலும் இக்காட்சி வாழ்க்கையுமன்று நாடகமு மன்று. ஏனெனில், இதனிற் கலையின் பொலிவில்லை; கலையின் பொலிவு இல்லாவிடத்து அன்பும் இல்லை, அறனும் இல்லை. இவை யிரண்டும் இல்லாக்கால் வாழ்க்கை என்பதும்இல்லை என வோதுவார் நம் பொய்யாமொழிப் புலவர். எனின், மெய்வாழ்வற்றவர்களாகிக் கிடப்பவர் இவ்வுலகத்தின்பால் கொள்ளவல்ல உறவெல்லாம் கருதுங்கால் இருட்டறையில் பிணந்தழுவிய புன்மையாய் முடிகின்றது. கலையுணர் வில்லாதான் வாழ்க்கையினின்று அறத்தின் நினைவு அகன்றுவிடும். கலையுணர்வு கைவரப்பெறாதான் ஒருவன் அறமுடைய நல்வாழ்வு வாழ்கின்றான் என்று கருதுவது வீண். ஆங்கிலப் புலவர் ப்ளேக் (Blake) என்பார் ஒருவர்முன், "கலைஞர் அல்லாதார் கிறிஸ்தவரும் அல்லர்" (The man that is not an artist is not a Christian) என்று கூறியபோது இவ்வுண்மையையே தம் உள்ளத்தினின்று கதறினார். ஏனெனில், கலையின்பொலிவு ஆன்மவுணர்வினின்று வேறுயதன்று. ஆன்மாவைப்பற்றிய மெய்யறிவே அறமும் ஆம். அறமென்பதெல்லாம் அறிவேதான்என்று ஸாக்ரிடீஸ் கூறுகின்றார். ஆயினும், புத்தியினின்று புத்திக்குப் போதிக்கக்கூடியதாகிய வோர் சிற்றறிவு அன்று அது. மனிதனது ஆழத்தினின்று சுரக்கின்ற அப் பேரறிவே அறமாக நிகழ்கின்றது. ஒருவன் தன்

மனத்தை உயர்த்திக்கொள்வதால் இவ்வறிவு பெறப்படும். மனம் உயரவேண்டுமாயின், "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வள்ளுவநாயனார்தம் திருவாக்கே நமக்குக் கைதந்துதவும் மந்திரமாம். உயர்வுள்ளுதல் என்பதன் இலக்கணத்தை இரண்டொரு சொல்லிற் சொல்லலாம். தன் 'உரிமை' என்பதனைக் கடந்து மேலொன்று நினைத்தலே உயரநினைத்தலின் மேன்மை. மேலோர், பிறர் தமக்குச் செலுத்தவேண்டியகடமைகளாலும், தாம்செலுத்தவேண்டியகடமைகளுக்கு எதிராக வுள்ள உரிமைகளாலும் பின்னிக்கிடக்கின்றவொரு உலகத்தைப் பின்னே போகவிட்டு முன்செல்வோர். இந்த அரியநிலையை யெய்துவதற்குத் தான் நாம் முன்னே சொன்னபடி அறத்தினது உருவாய அறிவு அவரவர் ஆன்மஉணர்வினின்று கலையின் பொலிவினால் நேரே சுரத்தல் வேண்டும். எத்துணைக்கு எத்துணை ஆழமாக ஒருவனது வாழ்க்கை அவனது ஆன்மவுணர்வில் ஆணிவேர் ஊன்றி இருக்கின்றதோ அத்துணைக்கத்துணை தெளிவாக அவன் அனைத்தையும் நேரே அறிகின்றான். கடமை என்பது இன்னதெனக் கலங்காத காட்சியுடையவனாவான் அவன். தர்க்கமுறையாலும் விடய ஆராய்ச்சியாலும் முதலில் காரணங்களைக்கண்டு கொண்டு பிறகு மெய்ம்மையின் நிலையைத் தேர்ந்தறிந்து எய்துகின்றவர் அல்லர் அவர். இந்த முறைப்படி மெய்ம்மையை நாடிப் பறப்பவர், சிறிது தூரம் செல்லாமுன்னம் குன்றுமுட்டியகுருவியென இடர்பட நேரிடும். தர்க்கப்பயிற்சியும் புத்தி நுட்பமும் ஆராய்ச்சி வன்மையும் யாவர்க்கும் வேண்டற்பாலன என்பதில் ஐயமில்லையாயினும், இம்மானுயல் காண்ட் என்னும் அந்த ஜர்மன் வித்தகர் காட்டிய வண்ணம் அவைதாம் ஒருவன் மனத்தில் நிரந்தர உண்மையின் நிச்சயத்தை நிலைநிறுத்துதற்குப் போதமாட்டா. இவைகளினுடைய எல்லைக்கும் அப்பாலானது அவ் வுண்மை. ஆகையாற்றான் இவைகளைச் சிற்றறிவென்றுசெப்பவேண்டியதாகின்றது. கருத்துமுற்றத்தோய்ந்துள வோர் கலையுணர்வினின்று சுரக்கின்ற பேரறிவானது, அறத்தின் உருவமாக நேரே சென்று அம் மெய்ம்மையைப்பற்றிக்கொள்ளும். முதலில்நேர்முகமாய் நிகழ்வதாம் இது. இதன் பின், ஒருகால், ஆழ்ந்த சிந்தனையால், தாம் கண்ட அம்மெய்ம்மை மெய்ம்மையேஎன்று நிலைநிறுத்துவதற்குரியகாரணங்களைக் கண்டுபிடிக்கமுயலலாம், எனினும், இக்காரணங்களால் இவர் மெய்ம்மையை அறிந்தார் என மதித்தல் பிழை. தாம் முதலில் மெய்ம்மையென்று அறிந்ததற்குப்பின் வரும் சிந்தனையின் சூழ்ச்சியே இக்காரணங்கள். காரணங்கள் காணாவிடத்தும் மெய்ம்மை நிற்கும். மற்று, காணாத மெய்ம்மையைக் காரணங்களோ ஒருபோதும் காட்டமாட்டா.

இவ் வான்மாதான் யாதென்பது மிகப் பழைய கேள்வி. இதற்கு விடையளிப்பது எத்துணை அருமை என்பதை யாம்இப்பொழுது ஒன்றுங்கூறவேண்டா. அதனை அனைவரும் ஒருவாறு அறிவார்; எனினும், அதனை விளக்கியுரைப்பதற்கு ஒருவராலும் இயல்வதில்லை. நம் உடலமும் அன்று, இயக்குகின்ற உயிரும் அன்று, மனதும் அன்று, புத்தியுமன்று, மற்று இவைகளுக்கெல்லாம் அடியில் நின்று தாங்குவது போலும் இவ்வான்மா. நம் வாழ்க்கையின் அடிவாரமும் அது, ஏறும் படிகளும் அது, எய்துகின்ற சிகரமும் அதுவே. அதனை நாம் எந்த வாய்பாட்டிற்குள்ளும் அடக்கி இயம்பவோ இயலாது. "மனது எதை நினைக்கின்றதோ அதுவன்று; எதனால் மனது நினைக்கப்படுகின்றதோ அதுவே" என்று கேனோபநிடதம் பிரம்மத்தின் இலக்கணமாகக் கூறிய கொள்கை ஆன்மாவிற்கும் ஒக்கும். ஒன்று இரைதின்பதும் மற்றது அதனைப் பார்த்துக்கொண்டிருப்பது மாக இரண்டு பறவைகள் ஒரு கிளையில் உட்கார்ந்திருப்பதை உதாரணப்படுத்தி உபநிடதங்கள்காட்டுவதுண்டு. ஆன்மாவிற்கும், நான் என்றுநினைக்கப்படுகின்றதற்கும் உள்ள தொடர்பு இத்தகையதே. ஆன்மாவானது சிறிதேனும் விருப்புவெறுப்பற்றுப் பார்த்துக்கொண்டிருக்கின்றது; இந்நிலையில் அது எய்துகின்ற இன்பம், பந்தமென்பதற்றவோர் தூய்மை வாய்ந்தது. 'நான்' என்னும் அது உயிர்வாழ்க்கை விவகாரங்களில் ஈடுபட்டிருக்கும்பாகம். முன்னது, அகன்றது ஆழ்ந்தது மெய்ம்மையானது, எனினும், பொதுவாக, நம் அறிவினின்று மறைந்திருப்பது. மறைந்திருப்பினும் உள்ளுணர்வின் வேட்கையினால் வீசுகின்ற அவ்வான்மவொளி வந்து கதுவுங்கால் விளங்கவரும் நன்மைகள் எத்தனையோ பல. அவ்வொளி வந்து நம் புத்தியைப் பொலிவுசெய்யுங்கால் நாம் வித்தகர்கள் ஆகின்றோம்; நம் சித்தத்தைத் தூண்டுங்கால் வீரர்கள் ஆகின்றோம்; இதயத்தூடு அவ்வொளி பாயுங்கால் அன்பினைப் பெறுகின்றோம்; பின், நம்முடைய இருக்கையின் தன்மையையே அது மாற்றும்போது, இந்த மனிதப்பிறவியும் கடவுட்டன்மை அடைந்துவிடுகின்றது. அதன் ஆற்றலுக்கோ அளவில்லை, அது காணும் கனவுகளோ காட்சிக்கினியன, அதன் கருத்துக்களோ கடவுளன்னவை. அது தன்னைத் தெரிவித்துக்கொள்ளவல்ல அளவிற்கேனும் வகைகளுக்கேனும் எல்லை என்பது இல்லை. எல்லாவற்றையுந் தழுவிக்கொள்ளும் அது. ஆன்மவுணர்வுடன் வாழ்வாங்கு வாழ்கின்ற இவ் வாழ்க்கைநாடகத்தின் எண்ணரிய விந்தை இதுவாகும். நான் நான் என்று நடமாடுகின்ற வேகத்திற் கிடையேயும் ஆரவாரங்களுக் கிடையேயும் இவ் விந்தையைக் காணாமல் ஒழிகின்றோம். தர்க்கமும் புத்தியின் ஆற்றலும் மற்றெவ்வகைத் திறமைகளையும், இந்நாடகத்தை நலங்கெட்டாட்டிவைக்க அமையுமே யன்றி, அதன் அழகையும் மேன்மையையும் நன்மையையும், இவ்வளவும் அடங்கியிருக்கின்ற மெய்ம்மையையும் காட்டித்தரும் தாமோ அவைகளுக்கு இல்லை. ஆற்றலும்புத்தியும் பழைய கருவிகள், இவைகளால் வரும் வெற்றியும் நெடிது நாள் உண்ட எச்சில். அன்னவைகளைக்கொண்டு நாம் நமது ஆன்ம உயர்வினை எய்த இயலாது. அதனை எய்துவதற்கு நாம் புதிது பிறத்தல்வேண்டும். அவ்வுயரத்தை எய்தியவர்களெல்லாரும் உண்மையில் புதுப்பிறவிஎடுத்தவர்களே. அன்னவர்தம் உணர்வின்காட்சியால் கண்டுரைத்தவைகளை எடுத்து ஓதி ஓதி உலகமடங்கலும் அப் புதுப்பிறவியினுள் புகுவதற் கவாவி முயல்கின்றது இக் கலாநிலயம். அன்னோர் தம்மைப் புதிது பிறப்பித்த சாதனங்களை நாமும் தெரிந்துகொண்டுகையாளவேண்டும் என்னுங்கருத்துடையமுயற்சி வீணாகாது. கலையுணர்வும் அவ்வுணர்வினின்று சுரக்கும் அறிவும் அவ்வறிவினின்று அறமென்பது வேறாயமையாத பான்மையும் யாவும் கலங்கலில் காட்சியுடைய வித்தகர்தம் துணிவு. எனின், அனைத்திற்கும் ஆதாரமாயிருக்கின்ற அக்கலையுணர்வு வாய்ப்பதற்குரிய பயிற்சியைச் செய்தளிக்கும் கருமத்தை மேற்கொண்டிருக்கின்ற கலாநிலயம் தான் கருதிய பயனை எய்துவதற்கு நெடுங்காலம் காக்கவேண்டியிருந்தாலும், காத்திருந்த காலம் ஒன்றும் வீணாயிற்றென்றெண்ணாமை திண்ணம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[617-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பர் கருத்தினைக் கழுகு மறிந்தது.

தாலபலத்தி னின்றே இவன்சிரங்களைத் திசைகள் பத்திற்கும் பலியீவது காண்டியெனக் கடுகிய எருவை வேந்தனுக்கும் அரக்கர் தலைவனுக்கும் ஒருதனிப் போர் இனி நிகழ்கின்றது. சடாயு,

இடிப்பொத் தமுழக் கினிருஞ்சிறை வீசி யெற்றி
முடிப்பத் திகளைப் படியிட்டுமு ழங்கு துண்டங்
கடிப்பக் கடிதுற் றவன்காண்டகு நீண்ட வீணைக்
கொடிப்பற்றியொடித்துயர்வானவராசிகொண்டான்

[இராவணனது தலைவரிசைகளைக் கீழேதள்ளி அவைகளை முழங்குகின்ற தன் மூக்கினால் கடிக்கவேண்டி, இடிபோன்ற பேரொலியோடு பெரிய தனது சிறகுகளை வீசி அடித்துக்கொண்டு மிக விரைவாக ஓடிவந்து, பார்ப்பதற்கழகிய இராவணனது வீணைக்கொடியைப்பற்றி ஒடித்து, அதனால் சிறந்த தேவர்களின் வாழ்த்துமொழிகளைப்பெற்றான்.]

மூன்றுலகுடையவன் தங்கையின் மூக்கு முன்னே அறுந்ததன் தொடர்ச்சியாய் இன்றவன் கொடிமுறிந்தது. இதற்கு நெடிது நாட்களுக்கு முன்னரே, தலைகள்தோறும் முடியுடைய இவ்வரக்கனுக்கு முந்திஉற்பாதமாக அவன் வெற்றியம் பதாகை அற்று வீழ்ந்த தென்னத் தாடகைக் கொடியாள் அப் பொடியுடைக் கானகத்தில் இராகவன் விட்ட சுடுசரத்தினால் சாய்ந்துளள். வீணைக்கொடியைவீழ்த்தியது இன்றுஇக்கழுகேயாயினும், இராவணற்கதனைத் தந்திருந்தது யாரென விளங்கவில்லை. மாநுடத் தலையின் உருவம்எழுதிய கொடியையுடையவன் இராவணன் என்பது வான்மீகர் வழக்கு. தான் தின்னும்இரையை உயர்த்திய கொடியோன் இராவணன் ஆவது தக்கதே. மற்று, அதனை மறந்தோ கம்பர் வீணையாக மாற்றினார்; அல்லது பாத்திரங்களின் காட்சிக்கு ஏற்றபடி அவர் கொடியும் தானே மாற்றமடைகின்றதோ, எங்ஙனந் துணிவோம். வான்மீகத்தில் முழங்கியதுபோல் கம்பரது நூலில் இராவணன் ஓர் வெறும் ஆள்தின்னி அரக்கனேயாக வழங்கவில்லை. அவன் கோரைப்பற்களின் நீளமெல்லாம் கம்பர்தம் நூலில் குறைந்திருக்கின்றது. கொலுமண்டபத்திலும், அசோகவனத்திலும், போர்க்களத்திலும், இவ் வல்லரக்கன் வாழ்க்கையூடு உரைத்தற்கியலா ஒருவகை உயரிய மென்மையும் தொடரக் காணலாம். சீதையைத்தின்ன நினைப்பானேல் தானும் பின்னர்ச் சாக நினைப்பான். இவன்தானியற்றுகின்ற மறங்கள் எத்தனைக்கும் இடையே இன்னிசை யொன்றும் இயைந்து தவழ்கின்றது. இசைநயம் உணரும் செவியும் உவக்கு மிதயமும் உடையவன் இவனென்று உரைப்பது உண்மையே. இசையின் மென்மை இவனை ஒருபுற மியக்க இவன்றன் விதியின் வன்மையே மறுபுற மிழுக்கின்ற நுண்மையை,

வஞ்சனே னெனக்குநானே மாதரார் வடிவுகொண்ட
நஞ்சுதோ யமுத முண்பா னச்சினே னுளந்தேய்ந்து
நெஞ்சுநே ரான தும்மை நினைப்புவிட் டாவி நீக்க
அஞ்சினே னடியனேனும் மடைக்கல மமுதின்வந்தீர்

என்று மாயாசனகப்படலத்தில் இவன் சானகியை இரந்து பின்னின்றபோது பேசியமொழிகள் புலப்படுத்தும். இதனோடு,

பெண்ணெலா நீரே யாக்கிப் பேரெலா முமதே யாக்கி
கண்ணெலா நுங்க ளாக்கிக் காமவே ளென்னு நாமத்
தண்ணலெய் வானு மாக்கி யைங்கணை யரியத் தக்க
புண்ணெலா மெனக்கே யாக்கி விபரிதம் புணர்த்து [விட்டீர்.

என்று ஒருகால் இசைக்கவல்லவன் தொழிலும் முடிவும் யாவதேயாயினும், அவன் உயர்த்திய கொடியின்கண் வீணையின் உருவம் தோன்றலே சாலப் பொருந்துமெனல் திண்ணம். ஆதலின் அன்னவற்குக் கம்பர் வீணைக்கொடியைக் கொடுத்திருந்தனர். எனினும், இரும்புண்ட நீரென்ன அக் கரும்புண்ட சொல்லாளின் ஆசையை இதயத்துள் நிறுத்த இவன் நினைத்த வளவிலே, இளை கிளையிற் கொண்டால்போல் இவன் இசை கெடுகின்றதாதலின் இனி இவனுக்கு இக்கொடி தகாதெனத்தேர்ந்துதானோ இப்புண்டரம் முதலில் அதனை உடைத்தெறிந்தது! கம்பர் கருத்தினை அறிந்ததுபோலும் அக் கழுகின் வேந்து.

இன்னவாறு கொடிமுறிந்து நின்ற இராவணன், இதுகாறும் தன் பெருமைகெட்டு அவமானமடைந்திராதவன், உருக்கிய அரக்கைப்போல் கோபத்தால் மிகச் சிவந்த கண்களை யுடையவனாகி, உலகு ஏழும் நடுங்கும்படி சிரித்து, மலைபோன்ற தன் கையிலிருந்த வில்லையும் வளைத்து அம்புமாரி சொரிய, அதுகண்ட சடாயு, சில அம்புகளைத் தன் சிறகால் விலக்கினான், சில அம்புகளைத் தன் நகத்தால் பிளந்தான், சில அம்புகளைத் தன் மூக்கினாற்பற்றித் துண்டித்தெறிந்தான். எறிந்து, மீட்டும் இராவணன் தன் கை வில்லை வளைப்பதன்முன் சடாயு அவன் முகங்களின்மீது பாய்ந்து அவன் குண்டலங்களைப் பறித்துக்கொண்டு மேலெழுந்துவிட்டான். எழுந்த சடாயுவைத் தொடரச் சில வாளிகள் இராவணன் போக்கியவளவில், ‘வீழ்ந்தான் இனி இவ்வண்ணல்’ என விண்ணவர் அயர்ந்தார். அப்பொழுது,

புண்ணிற் புதுநீர் பொலியப்பொழி புள்ளின் வேந்தன்
மண்ணிற் கரனே முதலோருதி ரத்தின் வாரி
கண்ணிற் கடலென் றுநுகர்ந்தது கான்று மீள [ன.
விண்ணிற் பொலிகின்ற தோர்வெண்ணிற மேகமென்

[அம்பு பாய்ந்த புண்களினின்று இரத்தம் மிகச் சொரிகின்ற கழுகின் தலைவன், முன் தரையில் பெருகிய கரன் முதலிய அரக்கரது இரத்த வெள்ளத்தை, அங்குள்ள கடலென்று கருதிப் பருகிய ஒரு மேகம், அதனை மீண்டும் சொரிந்துவிட்டு வானத்தின் வெண்ணிறமுடன் பொலிகின்றதென்று சொல்லும்படி, விளர்த்துத் தோன்றினான்]

தோன்றியஇவன் வெஞ்சினத்துடன் நெட்டுயிர்ப்பு வீங்கி, இராவணனது இருபது தோள்களின்மீதும் தத்தி, மூக்காற் கொத்தி, நகத்தாற்குடைந்து, சிறகாற் புடைத்து, முத்தாரமணிந்த அவன் மார்பிலுள்ளகவசத்தை மூட்டறுத்தான்.

அறுத்தவனை இராவணனும் நூறு அம்புகள் எய்து எற்றினான். தேவர்கள் இது கண்டு திகைத்தனர்.

சடாயுவோ இமைப்பொழுதில் இராவணன் கையினின்று அவன்வில்லைப் பறித்துக்கொண்டுவிட்டனன். இன்னவாறு, ஒளியுடைய கயிலைமலையைச் சிவபிரானோடு தன்வலிய தோள்களால் பெயர்த்தெடுத்த இராவணனது வில்லை வாயிற் கௌவிக்கொண்டு எழுந்த சடாயு, இந்திர வில்லுடனே எழுந்த பெரிய மேகம் போல் விளங்கினன். பின், ஒருவருக்கும் புறங்கொடாத இந்திரன் தோற்று ஓடும்படி துரத்திய இராவணனது வில்லைத் தன் வாயினின்றும் வாங்கிக் கால்களால் ஒடித்தெறிந்தனன் சடாயு. தனது வலிமைக்குத் தக்கதாயிருந்த அவ்வில் ஒடிந்ததுகண்டு வெகுளி பொங்கிய இராவணன், விடமுண்ட சிவபிரான் திரிபுரத்தை எரித்த அம்புபோன்ற வோர் சூலத்தை எடுத்தெறிந்தான். அவ்வளவில், சடாயுவும், "இதற்கு நான் ஆற்றமாட்டேன் என்று எண்ணினையோ" என்று அவனை இகழ்ந்து, அந்த மூன்று தலைகளையுடைய சூலத்தைத் தன் மார்பின்மேல் ஏற்றுக்கொண்டான். அப்பொழுது,

பொன்னோக் கியர்தம் புலனோக்கிய
புன்க ணோரும்
இன்னோக் கியரில் வழியெய்திய
நல்வி ருந்தும்
தன்னோக் கியநெஞ் சுடையோகியர்
தம்மைச் சார்ந்த
மென்னோக் கியர்நோக் கமுமாமென
மீண்ட தவ்வேல்.

[பொன்னைப் பறிப்பதிலேயே நோக்கம் வைத்திருக்கின்ற விலைமாதருடைய இன்பத்தில் நோக்கமுடன் அவர்பால் சென்று அது எய்தப்பெறாமல் திரும்புகின்ற வறியோரைப்போலவும், இனிய கண்ணோட்டம் இல்லாத மாதர் இருக்கின்ற வீட்டிற்குச் சென்று அங்குத் தங்க முடியாமல் திரும்புகின்ற நல்ல விருந்தினரைப்போலவும், ஆன்மாவினிடத்தே செலுத்திய மனத்தையுடைய யோகியர்களைச் சார்ந்த அழகிய மாதர்தம் பார்வை பாராட்டப்பெறாமல் திரும்புவதைப்போலவும், இராவணன் எய்த சூலமானது ஜடாயுவின் மார்பைத் தாக்கியபோதிலும், சிறிதேனும் இடம்பெறாமல் திரும்பிவிட்டது.

கல்லாப் புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனக் காகுத்தன் விடுசரம் தாடகையின் மார்பில் தங்காது கழன்று சென்றதெனின், இல்லாள் நல்லாளுமாகி யமையாத மனையகம் நாடிச் சென்ற நல்விருந்தென மீண்டதிங்கு இராவணன் விட்ட சூலம். கல்லாத புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனக் கழன்றோடியது அங்கோர் வாளி; நல்லார் இல்லாத மனையிற் சென்ற விருந்தென மீண்டது இங்கு ஒருவேல்—எல்லாம் கலையாளும் கம்பர் செயல்.

வேலை இழந்தான் இராவணன். அவ்விழவிற்கோர் ஈடு செய்வான்போல் ஜடாயு, அவ் வல்லரக்கன் வேறோர் படை எடாமுன், விரைந்தெற்றித் தேர்ப்பாகன் தலையைப்பறித்து, கற்புடைய சீதையின்பால் மோகம் படைத்தவன் முகத்தெறிந்தான். இப்பரிபவத்தால் ஆற்றாச் சீற்றங்கொண் டழன்ற இராவணன், அங்ஙனே ஆடகத் தண்டொன்று கொண்டு புடைக்க, ஜடாயுவும் அவ்வடி பொறாமல் ஓர் மால்வரையென்ன மண்மேல் விழுந்தான். விழுதலும் இராவணன் விரைவுறத் தேருடன் விண்ணிலெழுந்தனன். சீதை துடித்தனள். இதனைக் கண்ட ஜடாயு, "அன்னமே அஞ்சேல்" என்ன அந் நங்கையைத் தேற்றி, நெடிதுயிர்த்தெழுந்து, "என்னைத் தப்பி நீ எங்கடா ஏகுவாய்" என உரப்பி, இராவணன் தேர்மீது விழுந்து, அவன் கையிருந்த தண்டினைப் பற்றித் தேரிற் பூண்ட குதிரைகள் பதினாறையும் தன் வலிய மூக்கினால் உயிர் கவர்ந்தான். இதனோடு நிற்கவில்லை இப் புள்ளின் அண்ணல். அவன் தேரையும் அழித்தான். வைத்தெய்ய வில்லிலாமையால் உலோபிகள் சேமித்த வோர் நிதியம் என்ன வீணிற்கிருக்கின்ற இராவணனது அம்பறாத் தூணியையும் அறுத்து எறிந்தான். அதனோடும் அமையாமல், இராவணனது மார்பிலும் தோளிலும் பாய்ந்து பாய்ந்து வீழ்ந்து சிறகாலடித்தான். வாயினாற் கடித்தான். இதனால், "போச்சு நின் ஆற்றல் இத்தனைதானோ" என்று எருவைக்கிறைவன் எள்ளும்படி இராவணனும் மூச்சற்று முடிசாயநேர்ந்தது. இந்நிலையில் படை வேறு காணாத இராவணன், 'இப்பொழுதே இவன் உயிரை உண்பேன்" எனத் துணிந்து, சந்திரகாசம் என்னும் தன் வாளினை உறையினின்றெடுத்துச் செவ்விதின் வீச, சடாயுவும்,

வலியின் றலைதோற் றிலன்மாற்றருந்
தெய்வ வாளா
லலியுந் தலையென் றதுவன்றியும்
வாழ்க்கை நாளும்
மெலியுங் கடைசென் றுளதாகலின்
விண்ணின் வேந்தன்
குலிசம் மெறியச் சிறையற்றதொர்
குன்றின் வீழ்ந்தான்.

[யாராலும் தடுக்க இயலாத தெய்வத்தன்மை வாய்ந்த அந்தச் சிவபிரானது வாளினால், யாராயிருப்பினும் அவர் தலை தவறாது அறுபடும் என்றவோர் உண்மை மாத்திரமேயல்லால், தனது ஆயுளும் குறைந்து முடிவு அடைகின்ற காலத்தைக் கிட்டிவிட்டதாதலின், வலிமையில் தோற்கவில்லையாயினும்; இந்திரன் வச்சிராயுதத்தை வீசச் சிறகறுந்து விழுகின்ற மலைபோல் விழுந்தான்]

வல்லரக்கன் தான் துவக்கிய தீமையை நிகழ்த்துவதற்கு இடையூறு செய்யவந்த சடாயுவை வென்றவாறுஇவ்வாறு. கடுஞ்சமர் தொடங்கியதுமுதல் தனித்தனி எல்லாத்திறத்திலும் வெற்றி சடாயுவினுடையதேயாயினும், இறுதியில் இற்று வீழ்ந்தது இவ் வீரப்பறவையே என்னுங்கால், வென்றோன்பால் சீற்றமும் வீழ்ந்தோன்பால் இரக்கமும் எழுவது இயல்பாகின்றது. சடாயுவின் வீழ்ச்சிக்குக் கம்பர் இங்கோர் காரணம் கூறுகின்றார். சிவபிரான் தந்த வாளே இவனை வெல்ல வந்ததென்ப தன்றியும் இச்சடாயுவிற்கு ஆயுள் முடிவடைகின்ற வேளையும் எய்தியது என்பதையும் இவ்வயின் நினைவுசெய்தளிப்பது கம்பர்தம் கலையாத நீதியின் சித்திரத்திற்கு இன்றியமையாததொன்றாம். இல்லையேல், இராவணனுக்கு ஆற்றலில் விஞ்சிய இப்பெருந்தகைக் கழுகு பட்டழிகின்ற பான்மையைக் காண்கின்றவர், "மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவம்" என்ற உண்மை என்னாயிற்றென்று திகைப்பது தக்கதேயாம். இந்தச்சங்கை இறையும் நில்லாமல் அவியும்வண்ணம், ஆயுள் கடையெய்திய சடாயுவைத் தெய்வவாள் தடிந்து வீழ்த்தியதன்றி, இருக்கவல்ல உயிரிற்கு இராவணன் இடரிழைத்தான் என ஒருபோதும் எண்ணலாகாமையை நிலைநிறுத்துகின்றது இந்தச் செய்யுள். இவ்வாறே நீதிக்கு மாறாக வொரு செய்தி நிகழ்வதுபோல்

தோன்றுகின்ற இடமெல்லாம் கம்பர் வேறோர் காரணமுண்மையைக் கருதச்செய்து அந்நீதியின் மாறுத மாட்சியின்கண் நம் மனத்தினைப் பிணிக்கின்ற நீர்மையைக் காணலாம். கூனுடைக் கொடியோள் ஒருத்தி தூய தேவி கைகேசியின் சிந்தையைத் திரிக்கவொண்ணுமோ வென்று நாம் அலமராமற் காக்குமாறு,

தீய மந்தரை யவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்து சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றுள வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்

[தீயவளாகிய மந்தரை அவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, தேவர்கள் செய்த மாயத்தாலும், அவர் பெற்றிருக்கின்ற வரங்கள் உண்மையாதலாலும், அந்தணர் ஆனவர் செய்திருக்கின்ற அரிய தவங்களின் பயனாகவும், கைகேசியின் தூய சிந்தையும் திரிந்தது.]

என்றும்,

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லரு டுறந்தன டூமொழி மடமான்

[அரக்கர் செய்திருக்கின்ற பாவங்களும், அவரல்லாத நல்லவர் செய்திருக்கின்ற தருமங்களும் ஏவுதலால், தூய மொழிகளையுடைய இளமைவாய்ந்த மான்போன்ற கைகேசி, இராமன்பால் வைத்திருந்த நல்லஅருளை விட்டவளானாள்]

என்றும் எடுத்துக்காட்டியிருக்கின்ற திறத்தினை இச்செவ்வியில் நன்கு மதித்தல்வேண்டும். அப்படியே, இராமனுக்கு அரசைநல்கித் தான் மாதவம் புரிய வினைத்தை நண்ண நினைத்ததை விளம்பித் தயரதன், தன் மந்திரக்கிழவர்தம் கருத்தினைக் கேட்டபோது, இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென இருந்த அவர், இறுதியில் ஒவ்வினர் எனின், தயரதனைத் தவஞ்செய விரைந்து போக்கி இராமனை ஏற்பதற்கோஇவருள்ளந் துணிந்தது என்ற ஐயம் புகுந்து கலக்குங்கால், அதனைச் சற்றே தணிக்குமாறு,

அன்ன ராயினு மரசனுக் கதுவல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பில்
மன்னு மன்னுயிர்க் கிராமனின் மன்னவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மிசைந்தார்

[மந்திரிமார், இரண்டு கன்றினிற்கு இரங்கும் ஒரு பசுவைப் போன்று இருந்தாராயினும், தயரதனுக்கு இத்தவத்தைப்போல் பின்னர் நன்மை தரவல்லது வேறு இல்லை எனக்கருதியும்,இப் பெரிய வுலகத்தில், நிலைத்த உயிர்களுக்கு இராமன் அல்லது அமையவல்ல மன்னர் இல்லை என நினைத்தும், விதியின் வலியினாலும் உடன்பட்டார்]

எனச் செப்பி, விதியின் வலியையும் நம் நினைவிற்குக் கொணர்ந்து அம்மந்திரக்கிழவர் தயரதன்பால் வைத்திருந்த அன்புடை நன்மதிப்பிற்கு எள்ளளவேனும் ஊனம் நேராமல் காக்கின்றார்.

இன்னவாறு, தெய்வவாளிற்கும் தேய்ந்த தன் நாளிற்கும் வலியொழிந்த அண்ணற் சடாயு,

விரிந்தார்சிறைகீழுறவீழ்ந்தனன்மண்ணின்விண்ணோ
ரிரிந்தா ரிழந்தா டுணையென்ன முனிக்க ணங்கள்
பரிந்தார் படர்விண் டுவினுட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தா ரதுநோக் கியசீதைது ளக்க முற்றாள்

[விரிந்த சிறகுகள் கீழே கிடக்கச் சடாயு தரையில் விழுந்தான். அவ்வளவில் தேவர்கள் அஞ்சிஓடலாயினர். சீதை துணையிழந்தாளே என்று முனிவர்கள் துன்பங்கொண்டு இரங்கினர். வைகுண்டத்தில் இருப்பவர்கள் பைம்பொன் மயமான மலர்மாரியைச் சடாயுவின்மீது சொரிந்தனர். சடாயு விழுந்ததைக் கண்ட சீதை நடுங்கினாள்.]

என் செய்வாள் சீதை. சடாயுவும் சாய்ந்தான், விற்பிடித்த வீரரும் இன்னும் வந்தாரல்லர்,

வெள்கும் மரக்கன் னெடுவிண்புக வார்த்து மிக்கான்
தொள்கின் றலையெய் தியமானெனச் சோர்ந்துநைவாள்
உள்கும் முயிர்க்கும் முயங்கும்மொரு சார்பு காணாள்
கொள்கொம் பொடியக் கொடிவீழ்ந்தது போற்கு லைந்தாள்

[சடாயுவின் ஆற்றலுக்கு இளைத்ததனால் வெட்கமடைந்த இராவணன், அச் சடாயு ஒழிந்தவளவிலே, பெரிய வானத்தில் போய் எட்டும்படி ஆரவாரஞ்செய்து விஞ்சினான். அப்பொழுது வலையில் அகப்பட்ட மான்போலச் சோர்ந்து தளர்ந்த சீதை, தன் நிலையைப்பற்றிச் சிந்திப்பாள், பெருமூச்சு விடுவாள், வாட்டமடைவாள், ஆதரவு ஒன்றுங் காணாதவளாகி, கொள் கொம்பு ஒடிய அதன்மீது படர்ந்திருந்த கொடியானது விழுந்ததுபோல் நிலைகுலைந்தாள்.]

இந்நிலை யெய்திய சானகி இனி, உளைகின்ற உள்ளமோடு பற்பல பன்னிப் புலம்பலுறுகின்றாள்.

அமீல்

[595-வது பக்கத் தொடர்ச்சி]

சித்தத்தின் இயக்கங்களை(feelings) எதிர்த்து அடக்காதே. உன் வாணாளின் இலக்ஷியங்களை நீ அவைகள் மூலமாகத்தான் அறியக்கூடும். வெறும் மனோபாவனைகளுக்கும் பிடிவாதத்திற்கும் இடங் கொடாதே. மனோபாவனை மதியை மயக்கிக் கெடுக்கின்றது; பிடிவாதம் கொடுங்கோல்அரசனை ஒத்துளது. விநாடிகள் தோறும் சிறிளழும் இச்சைகளுக்கும் பிரேமைகளுக்கும் அடிமையாகாதே. இன்னமும், முன்பின்பாராது வாணாளை ஒரேநெறியிற்புகுத்தி இடுகிய கண்களுடன் முன்பாயாதே. வாணாளில்அவ்வப்போது நேரிடுபவைகளையும், எதிர்பாராத சம்பவங்களையும் பார்த்துத் திகைப்புறாமல் மனமுவந்து ஏற்று, யாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து, உன் நோக்கத்திற்கு ஏற்றதைத் தெளிந்து பற்றித் தொடர்ந்து மேலெழுவாயாக.

லௌகிகத்வத்தைத் தூய்மைப்படுத்தித் தெய்வீகத்வமாகப் பொலிவுறச் செய்வாயாக; தெய்விக வாழ்க்கையோ இயலாத வாழ்க்கை எனவும், பூதவாழ்க்கை அதற்குச் சத்துரு எனவும் வீணே மருளாமல் இகலோக வாழ்க்கையை இவ் விநாடிமுதல் புனித வாழ்க்கையாகத் திருத்தி உயர்த்துவாயாக.

அகப் புறப் போராட்டங்களின் மூலமாகத்தான் மனோவமைதி ஊறிப் பெருகும்; வலி வருத்த மேக்கமாகியவைகளின் மூலமாகத்தான் ஆனந்தம் ததும்பி ஆன்மாவைக் குளிர்ப்பித்து காலாபக்கங்களிலும் பரவும் என்ற உண்மையை மறவாதே.

ஓய்வுஒழிவுக ளில்லாமல்,சதாகாலமும் ஓடியாடிப் பற்பல கவலைகளாற் பீடிக்கப்பட்டு, உடைமைகளின் நிமித்தம் பாடுபட்டுப் பெருமூச்செறிந்து மாயச்செயும் கருமங்களையும் சித்தப்போக்குகளையும் அடக்க வேண்டும்.

கழிந்தவைகளுக்கு இரங்கி, வருங்காலத்தை அதிக

ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமாய், தற்சமயத்தில் தோன்றுபவைகளையும் நிகழ்கின்றவைகளையும் அவமதித்து அவமே இருத்தலை ஒழிக்கவேண்டும்.

[கர்மங்களில் ஈடுபட்டு உழல்வதினின்று விடுபட வேண்டுமென்று அமீல் என்னும் இப்பெரியார் சிற்சிலபோது சொல்கின்றதிலிருந்து, நாம் சோம்பல் மேலிட்டு வாணாளை வீணாளாகப் போக்கவேண்டுமெனப் போதிக்கின்றாரென்று கொள்ளக்கூடாது. மனத்தை ஒருமுகப்படுத்திச் சிந்தனையிலாழ்தலால் ஆன்மாவைச் சூழ்ந்துநிற்கும் மருட்படலங்களும், பற்பல கவலைகளாலும் துக்கங்களாலும் உண்டாகும் மனப் புழுக்கமும் முகச்சுருக்கங்களும் நீங்கும்; நீங்கவே,தேகம் வன்மைபெற்று, புலன்கள் சீருற்று, சிந்தனைகள் துல்லியமாகி, முகம் காந்திபொருந்தி, கருமங்கள் சிறந்து, வாணாள் மாண்புறுகின்றதுபோலும்.]

ஒவ்வொருவர் வாணாளும் அவ்வவர் சிந்தனையின் போக்கையும் தன்மையையும்,அதின்மீதுள்ள நம்பிக்கையையும் குறிப்பிப்பது போலும்.

ஒருவனுடைய வாணாட்போக்கு, அல்லது சொற்களும் செயல்களும் அகோசரமானவழிகளால்அயலவரையும் பாதிக்கின்றன. பிரகாசமுடைய வஸ்துவினின்று ஒளி வெளியாதல்போல், ஒவ்வொரு ஆன்மாவினின்றும் அதன் குணுதிசயங்கள் வெளியாகிப் பிறரை நன்னெறியிலோ, அல்லது தீய வழிகளிலோ புகுத்துகின்றன. இன்னல் இடர்களான பாறைகளில் ஏனையோர் மோதிவீழ்ந்து உடையாமல் இரக்ஷிக்கும் தீபஸ்தம்ப மாகவோ, அல்லது அப்பாறைகளினிடையே இழுத்து மோதித் தகளாக்கும் பேயாகவோ ஒவ்வொரு ஆன்மாவும் விளங்குகின்றது.

பெண்பாலர் சமூகச் சம்பிரதாயங்களின் பரிபாலகராகவும் அடைக்கலமாகவும் விளங்குபவர்; மானுடவாழ்க்கையின் உயர்வையும் ஆதர்சத்தையும் நன்கு நிலைநிறுத்துபவர் ஆண்பாலார். ஒருபுறம், மதம் அறம் அன்பு இன்பங்களின் வளர்ச்சிக்குரிய தூண்டுகோலும் பக்கபலமும் ஆகி, மறுபுறம் குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒருதலைச்சார்பு அசூயை முதலான இழிகுணங்களின் உறைவிடமாகவும் விளங்குகின்றவர் பெண்பாலர். சிருஷ்டியின் விசித்திரங்களில் இதுவுமொன்று போலும்.

தீமைகளையும் பிணிகளையும் பார்த்து மனப்புதற்றமுறாமல், அறிவும் அருளும் மிக்க கடவுளால் ஆக்கப்பட்ட இவ்வுலகில் அவைகளின் இருப்பிற்குக் காரணம்ஒன்று இருக்கவேண்டுமென உணர்ந்து, அதைச் சோதித்தறிய முயற்சிக்கவேண்டும். ஜீவனையும் இன்பத்தையும் ஜகதீசன் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அளித்திருக்கின்றான்; இப் பெருங் கொடைகளின் தோற்ற வித்தியாசங்களுக்குக் காரணம் யாதெனின், நாம் ஒவ்வொருவரும் பல்வேறு முயற்சிகளி லீடுபட்டுப் பற்பல வழிகளைத் தொடர்தலும், அவைகளைப் பற்றிய நம்முடைய அறிவுமேதான்.

எல்லாம் ஈசன் செயல் என மனமொப்பி, கைக்கொண்டகருமங்களின் வெற்றியும் தோல்வியும் அவ்வீசனையே சார்ந்தன என நம்பி நம்முடைய கருமங்களை நாம் மேற்கொள்ளவேண்டும்.

புருஷார்த்தத்தைக் களங்கப்படுத்துகின்றவைகளைப் புறத்தே தள்ளி வளர்ந்து உயர்தற்கும், தட்டுத்தடைகளில்லாமல் முன்செல்லவும் உதவும் ஆன்மாக்களே சீரியர்.

மதத்தினது தூய்மையும், இராஜாங்கத்தின் நன்மையும், கல்விச்சாலைகளின் உபயோகமும் சிறப்பும் ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும் வழங்குகின்ற குண வொழுக்கங்கள் கற்பனைகள் அனையவைகளின் மூலமாக அறியப்படுவன. இவைகளிலொவ்வொன்றும் மற்றவைகளுக்கு ஆதாரமாகவும், தூண்டுகோலாகவும், அச்சாணியாகவும் விளங்குவதுபோலும்.

வேண்டாதவைகளைத் துறந்து, ஆகாதவைகளை ஒழித்து,மறவாழ்க்கையை விடுத்தபின்னேதான் நாம் ஆனந்தநிலை யடையக்கூடும்.

பிரபஞ்சத்தின் சக்தியையும் எழிலையும் உணர்ந்து, அந்தச் சக்தி எழில்களில் தோய்ந்து ஆனந்திப்பவன் கவி. பிரகிருதிசாஸ்திர பண்டிதனோவெனில், பிரபஞ்சத்தைக் கூறுபடுத்தி ஒவ்வொரு பாகத்தின் உபயோகத்தை ஆராய்பவனாவான்.

சத்தை உணர்ந்து அறிவதற்கு அனுகூலமாயிருக்கும் நெறியே தத்வஞானம் என்பது; இது எதையும் நூதனமாகக் கற்பிப்பதன்று. மற்று,உள்ளதை ஊன்றிப் பார்த்து, ஆராய்ச்சியில் ஈடுபட்டு அவைகளின் சூக்ஷ்மங்களை அறியப் பிரயத்தனஞ் செய்வதேயாகும். இவ்வாராய்ச்சி விசாரிப்புக்களின் பலன்தான் புனர்ஜனனம் அல்லது புத்துயிர் எனப்படுவது.

புரைதீர்ந்த ஞானம் பெறவிரும்பினால் விஷயாதிகளைப்பன்முறை ஆய்ந்தோய்ந்துபார்; எழில்வனப்பை உணரவிரும்பினால் ஒரேமுறை கவனித்துப்பார்.

ஒவ்வொருவரும் அவ்வவர் மன அமைப்பிற்கும் உள்ளப்போக்கிற்கும் தக்கவாறுதான் உலகாதிகளின் தாரதம்மியங்களைக் கண்டு அறிவார்; மற்று, கண்டு அறிதற்கியலும்.

பெற்றோர்களுடைய நடத்தைகளேகுழந்தைகளின் பற்றுக்கோடு, அல்லது மதம் ஆகுமேயன்றி அவர்களுடையசொற்களும் போதனைகளும்ஒருபோதும்பயன் பட்டு உதவமாட்டா. அவர்களுடைய அகச்சிந்தனைகள் அல்லது உள்ளாதர்சங்களின் உருவங்களான சொற்களும் செயல்களுந்தான் சிறுவர்களுக்கு வழிகாட்டியாக உதவுவன; அவர்களுடைய வார்த்தைகளும், நிந்தனைகளும், தண்டனைகளும், ஆசாபாசங்களின் ஆரவாரங்களும், குழந்தைகளை ஒட்டியவரையிலும், இடிமுழக்கத்தையும் களிக்கூத்தையுமே நிகர்க்கின்றனபோலும்; எவைகளை அவர்கள் மதித்துச் சிறப்பிக்கின்றனரோ அவைகளையேதான் குழந்தைகள் ஊகித்துப் பின்பற்றும். தமர் சிநேகிதர் அயலவர்களின் அகப்போக்கை உள்ளபடி பிரதிபலிக்கும் கண்ணாடியாம் சிறுவன். அதுவுமன்றி, தன்னோடு பழகுகின்றவர்களின் சிறுமைபெருமைகளை மிகைபடுத்தும் பூதக்கண்ணாடிபோலவும் விளங்குகின்றான்.

தமிழ்ப்பாடம் 84.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்துமாலை

[621-வது பக்கத் தொடர்ச்சி]

திருவேங்கடமாலையில் ஓர் இருபது செய்யுள்கள் கற்றோம். இதன்மேல், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடிய அஷ்டபிரபந்தத்தில் மற்றோர் நூலாகிய திருவரங்கத்து மாலையிற் சில செய்யுள்கள் கற்போம்.

இதுவும் ஒரு மாலை நூல். மாலை என்பது இன்னதென முன் (வால்யூம் 6 பக்கம் 513) சொல்லியிருக்கின்றோம். திருவேங்கடமாலையைப் போல் திருவரங்கத்துமாலையிலும் திருமாலின் புகழ் பலவாறாகப் பாடப்பெற்றிருக்கின்றது. திருவேங்கடமலையின் வளப்பம், அமைப்பு, அழகு முதலியவற்றைப் பலவகைகளில் அணிந்துரைத்துப் பிறகு திருமாலினது பெருமை கருணை அவர் பற்பல அவதாரங்களிற் புரிந்த செய்கைகள் முதலியவற்றை எடுத்தோதி, அப்படிப்பட்ட வேங்கடமலையே இப்படிப்பட்ட திருமால் தங்குமிடம் என்று இரண்டையும் சேர்ப்பது திருவேங்கடமாலைச் செய்யுள்களின் அமைப்பு. இத்திருவரங்கத்துமாலைச் செய்யுள்களில், ஸ்ரீரங்கநாதரே சகலலோக நாயகரென்றும், அவர் எடுத்த அவதாரங்களின் சிறப்பையும் அவரது கல்யாணகுண விசேஷங்களையும் புகழ்ந்து பாடுகின்றார் கவி.

இருகூல மும்பொரு மாநீ ரரங்கத்தி லெந்தையந்தண்
முருகூர் கமல முனியாய் வகுக்கு முறைமையினாற்
புருகூ தனக்குத் திருத்தம்பி யாகிப் புரக்குமுமை
யொருகூறு கொண்டவரனா யழிக்கு முகாந்தத்திலே.

பதப்பிரிவு:—இரு கூலமும் பொரும் மா நீர் அரங்கத்தில் எந்தை அம் தண் முருகு ஊர் கமலம் முனி ஆய் வகுக்கும் முறைமையினால் புருகூதனுக்கு திரு தம்பி ஆகி புரக்கும் உமை ஒரு கூறுகொண்ட அரன் ஆய் அழிக்கும் உகம் அந்தத்திலே.

பதவுரை.

இரு - இரண்டு, கூலமும் - கரைகளையும், பொரும் - மோதுகின்ற, மா - மிகுந்த, நீர் - காவேரிநதியின் நீர்சூழ்ந்த, அரங்கத்தில் - திருவரங்கத்திலுள்ள, எந்தை - எம்பெருமான்,

அம் - அழகிய, தண் - குளிர்ச்சி பொருந்திய, முருகு - வாசனை, ஊர் - கமழும், கமலம் - தாமரையிலுள்ள, முனி ஆய் - பிரமமனாகி, வகுக்கும் - இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிசெய்வான்; (பிறகு)

புருகூதனுக்கு - இந்திரனுக்கு, திரு - சிறந்த, தம்பி ஆகி - தம்பி என்னும் உபேந்திரனாகி, முறைமையினால் - தக்க முறைப்படி, புரக்கும் - (இப்பிரபஞ்சத்தை) காத்தருள்வான்; (பின்)

உகம் - யுகத்தின், அந்தத்தில் - முடிவில், உமை - பார்வதிதேவியை, ஒரு - ஒரு, கூறு - பாகமாக, கொண்ட - வைத்திருக்கின்ற, அரன் ஆய் - பரமசிவனாய், அழிக்கும் - அழித்துவிடுவான்.

விரிவுரை:—ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அப் பெருமான்தான் பிரம்மனாகிப் படைப்பதும், உபேந்திரனாகிக் காப்பதும், சிவனாகி அழிப்பதும், ஆகிய முத்தொழில்களையும் புரிகின்றான் என்பது இச்செய்யுளின் கருத்து. ஆகையால், இம் மூபெருந் தேவரும் வேறு வேறான கடவுளர் அல்லர் என்பது தான் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கொள்ளும்கொள்கையும் ஆகின்றது. எனவே, முன் திருவேங்கடமாலையில், "ஈசனுக்கு வாய்த்த நஞ்சு வைத்தான்," என்று பரமசிவனைப் பழிப்பதுபோல் தோன்றும் பல இடங்கள் அஷ்டபிரபந்தத்தில் இருந்தபோதிலும், வாஸ்தவத்தில் அவை துவேஷசிந்தனையோடு இப் புலவர் பிறதெய்வங்களைப் பழிக்கின்ற புன்சொற்கள் என்று எண்ண நியாயமில்லை. இந்தப் பரமபக்தர் தாம் ஆராதனைசெய்யும்மூர்த்தியினிடத்தில்கொண்டவோர்ஆர்வத்தையே அத்தகையமொழிகள் காட்டுவனவாகக் கொள்ளல்வேண்டும்.

திருமால், தேவேந்திரனது வேண்டுகோளுக்கிணங்கிக் காசியப முனிவருக்கும் அவரது மனைவிக்கும் மகனென அவதரித்து, உபேந்திரன் என்னும் திருநாமத்தோடே இந்திரனுக்குத் தம்பியாகி அவனருகி லிருந்து சகல லோகங்களையும் காத்தளிக்கின்றார் எனப் புராணங்கள் கூறும்.

சின்னூல் பலபல வாயா லிழைத்துச் சிலம்பிபின்னு
மந்நூ லருந்தி விடுவது போல வரங்கரண்டம்
பன்னூறு கோடி படைத்தவை யாவும் பழம்படியே
மன்னூழ் தன்னில் விழுங்குவர்போத மனமகிழ்ந்தே

பதப்பிரிவு:—சில்நூல் பல பல வாயால் இழைத்து சிலம்பி பின்னும் அ நூல் அருந்தி விடுவது போல அரங்கர் அண்டம் பல்நூறுகோடி படைத்து அவை யாவும் பழம்படியே மன் ஊழி தன்னில் விழுங்குவர் போத மனம் மகிழ்ந்து ஏ.

பதவுரை.

சிலம்பி - சிலந்திப் பூச்சியானது, பலபல - அநேகம், சில் - மெல்லிய, நூல் - நூல்களை, வாயால் - தன்னுடைய வாயினால், இழைத்து - திரித்து, பின்னும் - மறுபடியும், அ - அந்த, நூல் - நூலை, அருந்தி விடுவதுபோல - தானே விழுங்கிவிடுவதைப்போல்; அரங்கர் - ஸ்ரீரங்கநாதர்,

பல்நூறு - பலநூறு, கோடி - கோடிக்கணக்கான, அண்டம் - அண்டங்களை, படைத்து - சிருஷ்டித்து, அவை யாவும் - அவைகள் அனைத்தையும், பழம்படியே - முன்போல, மன் ஊழிதன்னில் - பெரிய பிரளயகாலத்தில், போத - மிகவும், மனம் - தன் மனமானது, மகிழ்ந்து - உற்சாகங்கொண்டு, விழுங்குவர்—விழுங்கிவிடுவார்.

விரிவுரை:—ஜீவசாஸ்திரம் (Zoology) படித்தவர்களைக் கேட்டால், சிலந்தி தான் இழைத்தநூலை மறுபடி விழுங்குவதில்லை என்றும், விழுங்குவதுபோல் தோன்றினாலும் அதுவாஸ்தவத்தில் அந்நூலைத்தன் கால்களிலேதான் சுற்றிக்கொள்கின்றதுஎன்றும் சொல்லுவார்கள். அதன்உண்மை எப்படி இருந்தபோதிலும் பார்வைக்கு விழுங்குவதுபோல்தோன்றுவதால் இவ்வுவமை தக்கதாகின்றது.

குறிப்பு:—மன் + ஊழி - மன்னூழி, என்று நிலைமொழியீற்று னகரமெய் தனிக் குறிலோடு நிற்பதால் விரிந்து வருமொழி முதல் உயிரை ஏற்றது.

பந்திக் கமலத் தடஞ்சூ ழரங்கர் படைப்பழிப்புச்
சிந்தித் திடுவது மில்லைகண் டீரத் திசைமுகனோ
டுந்திக் கமலம் விரிந்தால் விரியு முகக்கடையில்
முந்திக் குவியினுடனே குவியுமிம் மூதண்டமே. 3.

பதப்பிரிவு:—பந்தி கமலம் தடம் சூழ் அரங்கர் படைப்பு அழிப்பு சிந்தித்து இடுவதும் இல்லை கண்டீர் அ திசைமுகனோடு உந்தி கமலம் விரிந்தால் விரியும் உகம் கடையில் முந்தி குவியில் உடனே குவியும் இ முது அண்டம் ஏ.

பதவுரை

பந்தி - வரிசையாக, கமலம் - தாமரை மலர்களையுடைய, தடம் - குளங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்கர் - ஸ்ரீரங்கத்தில் இருக்கும் எம்பெருமான், படைப்பு - படைப்பதைப் பற்றியும், அழிப்பு - அழிப்பதைப் பற்றியும், சிந்தித்திடுவது - மனத்தினால் நினைப்பது கூட, இல்லை - இல்லை, கண்டீர் அறிவீராக. (பின், இவை எவ்வாறு நிகழ்கின்றன எனின்)

அ - அந்த, திசை முகனோடு-பிரம்மாவினுடன், உந்தி - திருமாலினது நாபியாகிய, கமலம் - தாமரை, விரிந்தால் - மலர்ந்தால், இ - இந்த, முது - பழமையான, அண்டம் - அண்டங்கள், விரியும்-தாமாகவே தோன்றலாகும். உகம் - யுகத்தினது, கடையில் - முடிவில், முந்தி - முன்போல, குவியின் - அவ்வுந்தித் தாமரை பிரம்மாவுடன் குவியுமானால், உடனே-அப்பொழுதே, குவியும் - இவ்வண்டங்கள் தாமாகவே ஒடுங்கிவிடும்.

விரிவுரை:—படைப்பு அழிப்புத் தொழில்கள் பரம புருஷனுக்குப் பெருங்காரியங்கள் அல்லவென்பது இச்செய்யுளின் கருத்து. இவைகளைச் செய்யவேண்டும் என்று அவர் மனதில் நினைக்கின்ற அளவு சிரமங்கூட எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அவர் திருநாபிக்கமலம் விரியவுங் குவியவும் இவ்வண்டங்களுந் தாமே தோன்றி மறைகின்றன. இவ்வதிசயத்தைக் காணுங்கள் என்று, கவி நம்மை அழைத்துக் காட்டுகின்றார்.

ஓருரு வெற்பைத் தரித்தது தானவ ரும்பருள்ளாய்
ஈருரு நின்று கடைந்தது வேலை யிதனிடையோர்
பேருருவின்னமுதோடே பிறந்தது பெண்மைகொண்
டோருரு நின்ற தரங்கா விதுவென நற்றவமே

பதப்பிரிவு:— ஓர் உரு வெற்பை தரித்தது தானவர் உம்பர் உள் ஆய் ஈர் உரு நின்று கடைந்தது வேலை இதன் இடை ஓர் பேர் உரு இன் அமுதோடே பிறந்தது பெண்மை கொண்டு ஓர் நார் உரு நின்றது அரங்கா இது என்ன நல் தவமே.

பதவுரை.

அரங்கா-திருவரங்கநாதனே, (பாற்கடல்கடைந்த போது) ஓர் உரு - உன்னுடைய வடிவமொன்று, வெற்பை - மந்தரமலையை, தரித்தது - ஆமையாகத் தாங்கியது; தானவர் - அசுரர்களுக்கும், உம்பர் - தேவர்களுக்கும், உள் ஆய் - நடுவே, ஈர் உரு - உனது இரண்டு உருவங்கள், நின்று - நின்று, வேலை - அக்கடலை, கடைந்தது - கடையலாயின. இதன் இடை - இதற்கிடையிலே, ஓர் - ஒரு, பேர் - பெரிய, உரு - உருவம் ஒன்று, இன் - இனிய, அமுதோடே - அமிர்தத்துடன், பிறந்தது - அப் பாற்கடலினின்று தந்வந்திரியாகத் தோன்றியது. (பிறகு) பெண்மை கொண்டு - பெண் ஆகி, ஓர் - ஒரு, நார் - விரும்பத்தக்க, உரு - மோகினி வடிவம் ஒன்று, நின்றது - நிற்கலாயிற்று. இது - இவ்வாறு பலவுருவங்கள் எடுத்து நீ அருள் செய்தது, என்ன - என்ன, நல் - நல்ல, தவமே - தவத்தின் பயனோ!

விரிவுரை:—திருமால் ஒருவரே பல வடிவங்கள் கொண்டு பாற்கடலைக் கடைந்துஅமரர்களுக்கு அமிர்தம் அளித்தபெருமையை இச்செய்யுள் எடுத்துக் கூறுகின்றது.

குறிப்பு:—நளவெண்பாவும்,திருவேங்கடமாலையும் வெண்பா என்னும் செய்யுள்களால் அமைந்தன. இத்திருவரங்கத்துமாலை கட்டளைக்கலித்துறை என்னும் பா இனத்துச் செய்யுள்களால் ஆனவை. இதனில் ஒவ்வொரு செய்யுளிலும், ஒவ்வொரு அடியிலும் உள்ள உயிரெழுத்துக்களையும் உயிர்மெய் யெழுத்துக்களையும் மாத்திரம் எண்ணினால் பதினாறு எழுத்துக்கள் சிலசெய்யுள்களிலும் பதினேழெழுத்துக்கள் சில செய்யுள்களிலும் அடிதோறும் இருக்கக் காண்பீர்:-

இருகூல மும்பொரு மாநீ ரரங்கத்தி லெந்தையந்தண்,—என்னும் அவ்வடியில், ம் ங் த் ந் ண், என்ற மெய் எழுத்துக்களை எண்ணாமல் மற்ற எழுத்துக்களை எல்லாம் எண்ணினால் பதினேழு ஆகின்றது. அப்படியே அந்தச் செய்யுளின் மற்ற மூன்றடிகளில் ஒவ்வொன்றிலும் 17 எழுத்துக்கள் இருக்கக் காணலாம். நான்காவது செய்யுளின்,

"ஓருரு வெற்பைத் தரித்தது தானவ ரும்பருள்ளாய்" என்ற முதலடியின் மெய்யெழுத்துக்களை விட்டுவிட்டு எண்ணினால் பதினாறு எழுத்துக்கள் இருக்கும். இச்செய்யுளின் மூன்றாவது அடி மிகவும் நீளமாயிருப்பதுபோல் தோன்றினாலும் அதனிலும் மெய்யெழுத்துக்கள் போக மற்ற எழுத்துக்கள் பதினாறே.

இவ்வாறு எழுத்தெண்ணிச் செய்யுள் அமையக்கூடிய இரகசியத்தை யாப்பிலக்கணத்தில் அறிந்து கொள்ளலாம்.

இலக்கணம்.

நிலைமொழியிறுதியிலுள்ள மகரமெய் வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும்போது எந்தவெந்தத் தொடர்களில் கெடாமல், அந்த உயிரோடு சேர்ந்து உயிர்மெய்யாகி இயல்பாகும் என்றதைச் சென்ற வாரம் சொன்னோம். எனின், அத்தொடர்கள் தவிர மற்றத் தொடர்களில் மகரமெய் கெடும்.

1. வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்—

(1) ஆறும்வேற்றுமைத் தொகையில், நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெடும்.

மரம் + அடி-மரவடி (மரத்தினுடைய அடி). ஆறும் வேற்றுமைத் தொகை.

பவளம் + ஒளி = பவளவொளி (பவளத்தினுடைய ஒளி) ஆறும் வேற்றுமைத் தொகை.
ம் கெட்டன

எனினும்ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராயிருந்தாலும், நிலைமொழி வினையாலணையும் பெயராகவாவது இரண்டெழுத்துடையதாகி முதலெழுத்துக்குறிலாகவும் உடையசொல்லாகவாவது இருக்குமானால் அவைகளின் இறுதியிலுள்ள மகரமெய்வருமொழி முதலில் உள்ள உயிரோடு புணரும்போது கெடாமல் இயல்பாகவே இருக்கும். உதாரணம்:—

வந்தேம்:—இளைப்பு = வந்தேமிளைப்பு(வந்தவர்களாகிய எங்களுடைய இளைப்பு); நிலைமொழி வினையாலணையும் பெயராதலால் ம் கெடவில்லை.

எதிர்த்தேம் + உரத்தைஎற்றினான் = எதிர்த்தேமுரத்தை... (எதிர்த்தே முடைய உரத்தை...) இங்கும் நிலைமொழி வினையாலணையும் பெயர்—ம் கெடவில்லை.

நம் + அழகு = நம்மழகு—நிலைமொழி குற்றெழுத்தை முதலினுடைய இரண்டெழுத்துச் சொல்லாதலால், ம் கெடவில்லை.

கம் + அசைவு = கம்மசைவு (கம் = ஜலம், கம்மினுடைய அசைவு) இங்கும் நிலைமொழி குற்றெழுத்தை முதலினுடைய இரடெழுத்துச் சொல்லாகையால் ம் கெடவில்லை. மற்ற மெய்களைப்போல ம் விரிந்தது.

(2) ஆறும்வேற்றுமைத் தொகை தவிர மற்றவேற்றுமைத்தொகைகளில் உருபுமாத்திரந் தொக்குஇருந்தால் மகரமெய்கெடாது. உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில்தான் நிலைமொழியீற்று மகர மெய் வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெடுகின்றது.

மரம் + அறுத்தான் = மரமறுத்தான்(மரத்தை அறுத்தான்)—இது, உருபுமாத்திரம் தொக்கிருக்கின்றஇரண்டாம்வேற்றுமைத் தொகையாகையால் ம் கெடவில்லை.

மரம் + உளி = மரவுளி (மரத்தை வெட்டும் உளி)—இது உருபும் பயனும் உடன்தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை—ஆகையால் ம் கெட்டது.

பாணம் + எய்தபுண் = பாணமெய்த (பாணத்தால் எய்த)...மூன்றும் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்க தொகை—ம் கெடவில்லை.

மரம் + அகல் = மரவகல் (மரத்தால் செய்த அகல்) மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை—ம் கெட்டது.

நின்குலம் + அழிவில்லை (நின்குலமழிவில்லை - குலத்திற்கு அழிவில்லை) நான்காம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை.

நின்குலம் + உரிமை பெற்றாய் = நின்குலவுரிமை (குலத்திற்கு உரிய உரிமைபெற்றாய்.) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை—ம்கெட்டது. [குலத்தினுடைய உரிமை என ஆறும் வேற்றுமையாகலா மெனினும், குலத்திற்குரிய உரிமை எனத் தகுதிப்பொருளில் நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனக் கொள்வதும் அமையும்.]

சயிலம் + இறங்கினான் = சயிலமிறங்கினான் (சயிலத்திலிருந்து இறங்கினான்) ஐந்தாம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை. [சயிலம் - மலை]

சயிலம் + அருவி = சயிலவருவி (சயிலத்திலிருந்து விழுகின்ற அருவி)—ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை—ம் கெட்டது.

நகரம் + இருந்தான் = நகரமிருந்தான் (நகரத்தில் இருந்தான்) ஏழாம் வேற்றுமைத் தொகை—ம் கெடவில்லை.

வானம் + அமரர் = வானவமரர் (வானத்தில் வசிக்கும் அமரர்) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை—ம் கெடவில்லை.

II அல்வழியில், பண்புத்தொகை உவமத் தொகை ஆகிய இவ்விரண்டு தொகைகளில்மாத்திரந்தான் நிலைமொழியீற்று மகரமெய் வருமொழி முதல் உயிரோடு புணரும்போது கெடும். மற்றத் தொடர்களில் கெடாது.

(1) பண்புத்தொகை

வட்டம் + ஆழி = வட்டாழி (வட்டம்ஆகியஆழி) பண்புத்தொகை—ம் கெட்டது.

குண்டலம் + அணி = குண்டலவணி (குண்டலமாகிய அணி) பண்புத் தொகை—ம் கெட்டது.

(2) உவமத் தொகை

பவளம் + இதழ் = பவளவிதழ் (பவளம் போன்ற இதழ். இதழ் - உதடு) உவமத் தொகை—ம் கெட்டது.

கஞ்சம் + அடி = கஞ்சவடி (கஞ்சம் போன்ற அடி) உவமத்தொகை—ம் கெட்டது.

மற்றத் தொடர்களில் ம் கெடாமல் இயல்பாகவேயிருந்து வருமொழிமுதல் உயிரை ஏற்று உயிர்மெய்யாவதற்கு உதாரணங்கள் முன்னரே காட்டியிருக்கின்றோம்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[626-வது பக்கத் தொடர்ச்சி]

பெட்டிவண்டியில் குந்திக்கொண்டு, அதில் குதிரையைக்கட்டி ஓட்டும்போது நாம் எப்படிச் சுற்றிச் சுற்றித் திருப்பி மறித்து வளைத்தாலும், குதிரைக்கு முன்னே நாம் போய்விடுவதென்பது ஒருபோதும் முடியாது. எந்தநிலையிலும் குதிரையே நமக்கு முந்தி நிற்கின்றது. அதேபோல உள்நாட்ட ஆராய்ச்சியில் (Introspection) 'குறிப்பு' என்னும்இதுவும்நமக்கு முன்னராகவே சென்றுவிடுகிறது. உள்நாட்ட வண்டியிலிருந்துகொண்டே குறிப்பென்னும் குதிரையின் முகத்தை நேரிட்டுக் காணமுடியாது. நாம் செவிட

ராகவும் குருடராகவும் இருந்தாலும், நமக்கு முன் குதிரையானது வண்டியை வலித்துச் செல்கின்றது என ஐயமின்றி உணர்கின்றோமல்லவா? அதுபோலக் குறிப்பென்பதும் ஒன்று உண்டு என்ன ஐயமின்றி உணர்கின்றோம். இவ்வாறு ஒப்புமைகூறி விளக்குகின்றார் மக்டூகல் என்ற பெரியார்.

குறிப்பு என்ற பண்புப்பெயரைப் பயன்படுத்திக் கொள்வதனாலேயே இந்த முட்டுப்பாடுகள் எல்லாம் எழுகின்றன. பண்பென்பது யாது? கருமை மென்மை திண்மை முதலியவற்றைக் குணப்பண்பு என்பர். ஓட்டம் நிலை முதலியவற்றைத் தொழிற்பண்பு என்பர். சாதிஎனும் பொதுத்தன்மை முதலியவற்றையும் பண்பிலே அடக்கி நன்னூலார்,

"அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம்
கதிசாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்" .

என்று கூறியபடி அவையனைத்தும் பண்பே எனக் கொள்வோமாக. இவ்வாறு அந்தச் சொல்லுக்கு அகலப்பொருள் கொள்வதால், ஆங்கிலத்தில் வழங்கும் abstract things என்ற சொற்றொடரைப் பண்புப்பொருள்கள் என மொழிபெயர்ப்பது எளிதாகும். ஆங்கிலத்தில் concrete things என்று சுட்டப்படுவன பண்பிப் பொருள்களேயாம். பண்பியை விட்டுப் பண்பை வேறு பிரித்து அஃதொன்று தனியே இடைநிலத்தில் ஊசலாடுகின்றது என எண்ணிப் பின் அதனையே தனியொரு பண்பிப் பொருளாக்கி அதன் தலைமேல் பலவேறு பண்புகளை அதன் இயல்பென ஏற்றிச் சுமத்தி அச்சுமையால் அப் பண்பே நொறுங்கி மறையுமாறு செய்வது நமது வழக்கமாய் விட்டது. குறிப்பென்பதும் இந்த நிலையில் இருக்கிறது. ஆனால் அது தனியே நிற்கும்பொருள் அன்று. செய்வோனை அல்லது வினைமுதலை விட்டுக் குறிப்பை நினைப்பதில் பொருளேயில்லை. சொல்வோன் குறிப்புப்போல இங்கே உணர்வோன் குறிப்பே ஆராய்ச்சிக் கிடமாகின்றது. "நான் குறிப்பது இது" என்று கூறும்போது, அந்தக் குறிப்பின் இயல்பினை நன்றாக அறிகின்றோம் அல்லவா? இந்தப் பேச்சு நமது உள்ளச் செயனிலை ஒன்றைக் குறிக்கின்றது. "முருகன் ஓடுகின்றான், பொன்னன் பேசுகின்றான்" என்று பேசுவதைவிட்டு "ஓட்டம்" என்ற பொருளும் "பேச்சு" என்ற பொருளும் தனித்தனிப் பொருள்களாகக் காலுங் கையுமாய்க் குந்திக்கிடக்கின்றன என்று கூறத் தொடங்கினால் நகைப்பே யுண்டாகும். "முருகன் குறிப்பதுஇது." என்று பேசுவதை விட்டு "குறிப்பு" என்று பேசத்தொடங்கியதும் குறிப்பென்பது கடவுளாகிவிடுகிறது. இதற்கும் எத்தனை கண் எத்தனை கை எத்தனை தலை என்ற ஆராய்ச்சியும் தொடங்குகிறது. போராட்டமும் வளர்கின்றது. இதனால் "குறிப்பு" என்ற அச்சொல்லையே பயன்படுத்தலாகாது என்பதல்ல கருத்து. எல்லோருடைய குறிப்பினையும் பற்றிப் பேசுதற்கு இச் சொல்லினிடத்தேதான் நாம் அடைக்கலம் புகவேண்டும். ஆனால் அவ்வாறு அடைக்கலம் புகும்போதும் இக் குறிப்பென்பது தனித்தனி யாள்களையே அடைக்கலம் புகுந்திருக்கிறது என்பதனையும் அவர்களை மறந்தால் நமக்குப்போக்கில்லை என்பதனையும் மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நான்குறிப்பது அனைத்தும் குறிப்பாகின்றது. "நாய்" என்ற சொல்லைக் கேட்டதும் நானறிந்த நாய்த்தன்மையோடு நாய் என்பது குறிப்பாக விளங்குகின்றது. புறப்பொருளே நானறிந்த அளவில் அகப்பொருளாகின்றது. இஃது என் குறிப்பு. இப்படியே பிறரும் குறிக்கின்றார்கள் என்று கூறுவதற்கில்லை. நாயைப் பற்றிப் பல நூல்களைக் கற்ற எனக்கு அவையனைத்தும் நாயின் இயல்பாகி விளங்க, இயல்புகளாற் கொழுத்த நாய் என்னுடைய குறிப்பாக விளங்குகின்றது. நாயைப்பற்றி அவ்வளவு அறியாதவொருசிறுவனுக்கோ நாலு காலும் ஒரு வாலும் "லொல் லொல்லு" மாக அந்த நாய் தோன்றுவதால் இயல்புகளால் மெலிந்த நாயே அச்சிறுவனுடைய குறிப்பாகின்றது. ஆளுக்கு ஆள் இவ்வாறு குறிப்பு வேறுபடுவது காண்க.

குறிப்பென்பதனைப் பொதுவுணர்வின்பாற்படுத்தி ஆராய்வாரும் இருக்கின்றார்கள். ஒரு சிலர் உணர்வினைச் சிறப்புணர்வு (Perception) என்றும், பொதுவுணர்வு (Conception) என்றும் இரண்டாகப் பிரித்து, நாம் இதுவரையும் உணர்வு என்று கூறி வந்தவற்றைச் சிறப்புணர்வின்பாற்படுத்திப் "பொதுவுணர்வுக்கு வழி எங்கே" என்று கேட்பர். என்னுடைய குதிரையைப் பார்த்து நிற்கிற எனக்கு, இந்த ஒரு குறித்தகுதிரையின் எண்ணமே எழுகிறது. இவ்வாறு குறித்த ஒரு பொருளைப்பற்றி உணர்வது சிறப்புணர்வாகும். "இந்தக் குதிரை அந்தக் குதிரை" என்பதின்றிப் பொதுவாகக் குதிரை என்கின்ற ஒரு எண்ணம் எழும்போது அதனைப் பொதுஉணர்வு என்பர். அங்கே பொதுத்தன்மையே தோன்றுகின்றது. ஆனால் பொதுஉணர்வும் சிறப்புணர்வும் இவ்வாறே ஒன்றோடொன்று இயைபென்பது இன்றியா உலகில் உலவுகின்றன? என்னுடைய குதிரை என்ற சிறப்புணர்வு எழுகின்றபோதும் அப்பொருளைக் குதிரை என்ற இனத்தில் வைத்தே உணர்கின்றேன். குதிரையின் பொதுத்தன்மையை யுணராதபோது குதிரை என்ற பேச்சே எழுவதற் கில்லை யல்லவா? ஆகவே அந்தச் சிறப்புணர்வில் பொதுஉணர்வும் இயைந்தே விளங்குகின்றது. இதனை யுணர்ந்த ஸ்டௌட் என்றவோர் ஆசிரியர், சிறப்புணர்வாவது பண்பியை (concrete) உணர்தல் என்றும், பொது உணர்வாவது பண்பை (abstract) உணர்தல் என்றும் வேறுபடுத்திக் காட்டி இந்தஇரண்டும், இரண்டு வேறு மனநிலையைக் குறிக்கின்றன என்றுரைப்பர். ஆனால் ஒரு மூட்டையினின்றும் எடுத்த ஒரு வெள்ளைத் துணியைமட்டும் உணர்வதற்கும், அவ் வெள்ளைத்துணியில் உள்ள வெள்ளைநிறத்தை மட்டும் உணர்வதற்கும் "உணர்தல்" என்ற உள்ளச்செய்னிலையில் ஏதேனும் வேற்றுமையுண்டோ? வேற்றுமையில்லாதவற்றைவேறுபிரிப்பதால் பயன் என்ன?

மேலே காட்டிய இனவுணர்வு, எல்லா வகையான உணர்வுகளிலும் விளங்குகின்றதாதலின் எல்லா உணர்வும் மறித்துணர்வே யாகும். முதன்முதலில் ஒரு புலியைக் காணும்போது எனக்குப் புலியின் புத்துணர்வு எழுகின்றது. அதனையே மறுமுறை காணும்போது மறித்துணர்வு (recognition) எழுகின்றது. ஆனால், ஒருவகையால் நோக்கும்போது, எல்லாம் மறித்துணர்வாகவே முடிகின்றன. புலி என்ற புத்துணர்வு எழுந்தபோதும் "இஃதொரு விலங்கு அல்லது உயிர்" என்று பழைய அறிவும் அங்கே எழுகின்றதல்லவா? விலங்காக உணர்வது மறித்துணர்வே

யாகும். ஒவ்வோ ருணர்விலும் "முன் நாம் அறிந்த இன்ன இனத்தை இது சேர்ந்தது" என்ற பொது உணர்வைக் காண்கிறோம். இந்த "இனவறிவு," முன்னறிந்த இனத்தி னுணர்வாகநிற்கின்றமையால் மறித்துணர்வே யாகும். தொலைவில் இருந்து ஓர் ஒலி கேட்கின்றது. அதனைப்பற்றி ஒன்றும் அறியாதவனும் 'ஒலி' என்று தான் அறிந்ததோர் இனத்தில் வைத்து "அங்கே" எனச் சுட்டி யுணர்கின்றான். விலங்கின் ஒலிகளை யறிந்தவன் 'இன்ன விலங்கின் ஒலி' என அறியாது போனாலும், பொதுவாகத் தான் முன்னர் அறிந்த "விலங் கொலி" என்ற இனத்தில் வைத்து உணர்கின்றான். யானையின் பிளிறுதலைக் கேட்டு அறிந்த ஒருவன் இது "இன்ன யானையின் பிளிறுதல்" என அறியாவிட்டாலும் பொதுவாகத் தான் அறிந்த "பிளிற்றொலி" என்ற இனத்தில் வைத்து உணர்கின்றான். அந்த ஊரில் வாழ்கின்றவர்களோ, அஃது அங்கிருக்கும் பெருமாள்கோவில் யானையின் பிளிறொலி என வேறுபிரித்துத் தாம் முன்னறிந்த அந்த யானையின் ஒலியை மறித்துணர்கின்றனர். அந்த யானையின் மாவெட்டியானோ, தான் முன்னறிந்த அந்த யானையின் நோய்ப்பிளிறு பசிப்பிளிறு மதப்பிளிறு என்ற பல்வகைப் பிளிற்றொலிகளில் இந்தப் பிளிறானது மதப்பிளிறு என்று மறித்துணர்ந்து உடனே குத்துக்கோலும் கையுமாக ஓடோடியும் வருகின்றான். குறிப்பானது சிறப்புநிலையுற்று "இந்த யானையின் இந்த வகையான ஒலி" என உள்ளும்போதுபோல, "அவ்வாறு சிறப்புநிலை யடையாது பொதுநிலையிலே வெறும்ஒலி" என்றுமட்டும் உள்ளும்போதுகூட மறித்துணர்தல் காணப்படுகின்றதல்லவா?

இவ்வளவும் கூறியமையால், புத்துணர்வுக்கும் ஓர் இடந்தான் உண்டோ என்றும் கேட்கலாம். இயற்கைச் செயனிலை வழியே இயங்குகின்ற உயிர்கள் தமது இயற்கையைத் தூண்டும் பொருள்களை, முதல்முதலாகக் காணும்போதுதான் அப் புத்துணர்வுஎழுதல் கூடும். முன்னர் நாம்கண்ட குளவியானது, முதல்முதலாகத் தனது கூட்டிற்கேற்ற புழுவை நாடிச்செல்கையில், அப்புழுவைக் காணும்போது எழுகின்ற அது புத்துணர்வே யாகும். இனத்தோடே வாழும் இயற்கையினையுடைய யானையின்கன்றினை, பிறந்தவுடனே, அதன் தாயினின்றும் பிரித்து எடுத்துக்கொண்டு வந்து பிற யானைகளைப் பார்க்காதபடி, அதனை நாம் வளர்த்துவருவோமானால், இனத்தோடே வாழத் தூண்டும் இயற்கைச் செயனிலை அக்கன்றினது மனத்திலே இயங்காமலே கிடக்கின்றது. பின்னொருநாள் அந்த யானைக்கன்று யானைக்கூட்டத்தை முதன்முதலாகக் காண நேரிடுமானால் அவ் வியற்கைச்செயனிலை இயங்குகிறது. அந்த நிலையில் அந்த யானைகளைக் கண்டபோது புத்துணர்வு எழுகின்றதென்பர் மக்டூகல் என்ற பெரியார்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[624-வது பக்கத்தொடர்ச்சி]

5-ம் பத்து, 8-ம் தசகம்.

அவதாரிகை:—முன் தசகத்தின் 10-ம் பாசுரத்தில், "ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றும், "உனக்கோர் கைம்மாறு நான் ஒன்றிலேன்" என்றும் உபகார ஸ்மிருதி செய்தவர், மாசறுசோதி என்று தொடங்கிய அத் தசகத்தில் தாம் பகவானைப் பிரிந்துநின்ற துக்கத்தை ஒருவாறு ஆற்றிக்கொண்டார் என்று நாம் நினைக்கக்கூடுமாயினும், இந்தத் தசகத்தில் நிரம்ப அலற்றுகிறபடியைக் கண்டால், அந்தப் பத்தாம் பாசுரத்தில் ஆழ்வார் பிரீதியடைந்ததற்குக் காரணமாவது, பிராப்யமும் உபாயமும் தானே என்பதைப் பகவான் காட்டிக் கொடுத்ததே என்று நாம் கொள்ளவேண்டும். ஆதலால் பகவானுடன் கலவியேற்பட்டதால் உண்டான திருப்தி அன்று அது. அர்ச்சாவதார திவ்ய மங்கள விக்ரகத்தின் ஈடுபாட்டினால் தமக்கு அபேக்ஷிதமான கலவை வாய்க்க இயலாமைபற்றி, அதன் காரணத்தைத் தம் திருவுள்ளங்கொண்டு விமரிசிக்காமல் நோவுமிகப் படுகின்றாரென்று நாம் கொள்ளவேண்டும். இந்தத் தசகத்தின் முதல் பாசுரத்தில்கூட, திருக்குடந்தையில் "கிடந்தாய் கண்டேன்" என்றதில், "நான் கண்டது மாத்திரமே நிகழ்ந்தது, நீயோ உன் திருக்கண்களாலே என்னைக் கடாக்ஷிக்கவில்லை, ஒரு வார்த்தை நீ யெனக்குச் சொல்லி யருளவில்லை" என்ற தாத்பரியம் அடங்கியிருக்கின்றது.

1-ம் பாசுரம்.

ஆரா வமுதே யடியே னுடலம்
நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்கு
கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலந் திகழக் கிடந்தாய்
கண்டே னெம்மானே

உரை:—ஆரா அமுதே - எத்தனை காலம் அநுபவித்தாலும் பக்தர்களுக்குத் திருப்தி வாராத அமிர்தம் போன்றவனே, அடியேன் உடலம் நின்பால் அன்பாயே - (என் மனது மாத்திரமல்லாமல்) என் உடலும்கூட (அது அசேதனமா யிருந்தபோதிலும்) உன்மீது மோகிக்கும்படி அன்பே உருவெடுத்தது போல் ஈடுபட்டு இருப்பவனே, நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே - (நெடுந்தூரத்திற்கு அப்பால் எனக்கு அரியையாக நீ இருந்தபோதிலும்) என் தேகமே நீராய்க் கரைந்துபோகும்படி உருக்கும் மகானே, சீர்ஆர் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை—சிறப்பு வாய்ந்த செந்நெற் பயிர்கள் உனக்குக் கவரி வீசுவதுபோல் அசைகின்ற நீர்வளப்பம் வாய்ந்த திருக்குடந்தை க்ஷேத்திரத்தில், ஏர்ஆர் கோலம் திகழக் கிடந்தாய் - ஸர்வ ஆபரணங்களும் ஸர்வ திவ்ய ஸௌந்தரியங்களும் மனதைக் கவரும்படி சயனம் செய்கின்றவனே, எம்மானே - என் பிரபுவே, அந்த ஸேவையைக் கண்டேன்.

குறிப்பு:—'அடியேன்' என்ற இந்தப் பதத்திற்குத் "தாவிய இரஸத்தில் தீர்ந்து அமைந்தவன்" என்ற அர்த்தம் கொள்வது இங்குப் பொருந்தாது. நம் ஆழ்வார், "மயர்வற மதிநலம்" பெற்றவராயினும், அவர் தற்காலம் மனக்கிலேசத்தால் வருந்தியிருப்பதால், "அடியேன்" என்ற சொல்லை உபசார ரீதியாகக் கொள்வதே தகும்.

2-ம் பாசுரம்.

எம்மா னேயென் வெள்ளை மூர்த்தி
யென்னை யாள்வானே
எம்மா வுருவும் வேண்டு மாற்றா
லாவா யெழிலேறே
செம்மா கமலம் செழுநீர் மிசைகண்
மலருந் திருக்குடந்தை
அம்மா மலர்க்கண் வளர்கின் றானே
யென்னான் செய்கேனே.

உரை:—எம்மானே - எனக்கு அத்தியந்தம் பிரியமான பிரபுவே, என் வெள்ளை மூர்த்தி - எள்ளளவேனும் அற்பகுணம் கலப்பில்லாமல் எல்லாக் கல்வியாண குணங்களாலும் நிறைந்தவனே, என்னை ஆள்வானே - உன்னிடத்திலேயே நான் பக்தி செலுத்தி உனக்குத் தாஸியன் ஆகும்படி என் அகத்திலிருந்து என்னை நடத்துகின்றவனே, எம் மா உருவும் வேண்டும் ஆற்றால் ஆவாய்-உன் பிரஜைகளைக் காப்பாற்றும் விஷயத்தில் அவசரத்துக்குத் தக்கபடி அவர்களை இரக்ஷிக்க உன்னுடைய சுவய சங்கல்பத்தால் ரூபங்கள் எடுப்பவனே, எழில்ஏறே-அழகிற்சிறந்தவனே, செம் ....குடந்தை - சிவந்த சிறந்த தாமரைமலர்கள் செழிப்பான நீர் நிலைகளில் மலர்கின்ற திருக்குடந்தையில், அம் மா மலர்க்கண் வளர்கின்றானே - அழகிய பெரிய தாமரைபோன்ற திருக்கண்கள் வளர்வோனே, என் நான் செய்கேன் - (நீ என்னைக் கண்ணால் குளிரக் கடாக்ஷிக்கவில்லையே) நான் இனி என்ன செய்வேன்.

குறிப்பு:—திருக்குடந்தை க்ஷேத்திரத்தில் தாமரை மலர்களெல்லாம் அலர்ந்திருக்கின்றனவாயினும், ஆராஅமுதன்ன எம்பெருமானது திருக்கண்களான கமலங்கள் மாத்திரம் மூடிக் கண்வளர்ந்திருக்கின்றனவே; என்னைக் கிருபையுடன் திறந்து நோக்கவோவில்லையே, நான் என்செய்கேன்' என்று வியஸநப்படுகிற இது, சென்ற பாசுரத்தில் வந்த "கண்டேன்" என்ற பதத்திற்கு யாம் எழுதிய தாத்பரியத்திற்கு இணங்கியிருக்கின்றது.

3-ம் பாசுரம்.

என்னான் செய்கேன் யாரே களைகண்
என்னை யென்செய்கின்றாய்
உன்னா லல்லால் யாவ ராலும்
ஒன்றுங் குறைவேண்டேன்
கன்னார் மதிள்சூழ் குடந்தை கிடந்தா
யடியே னருவாணாள்
சென்னா ளெந்நா ளந்நா ளுனதாள்
பிடித்தே செலக்காணே.

பொழிப்புரை:—என்னால் ஒரு செயல் இல்லை. நீயல்லாது எனக்கு மற்றொரு கதியில்லை. என்னுடைய யத்நத்தாலே உன் திருவடி மலர்களைப் பெறக்கடவேனாகவோ பார்த்தருளுகிறது. உன்னுடைய கிருபையாலே உன் திருவடிகளைப் பெறுதல் ஒழிய வேறோர் உபாயத்தால் பெறினும் எனக்கு வேண்டா - ஆனபின்பு, இனி என் ஆன்மா உள்ளகாலமும் உன் திருவடிகளைப் பிரியாதே இருக்கும்படி பார்த்தருளவேணுமென்கிறார்—ஆறாயிரப்படி.

பதக்குறிப்பு:—அடியேன்......காணே, அடியேன்-நித்திய தாஸனான என்னுடைய, அரு - சூக்ஷ்மமான ஆத்ம ஸ்வரூபம், வாழ்நாள் - ஜீவசக்தியோடு இருக்கின்ற காலத்தில், செல்நாள் - நடக்கின்ற தினங்கள், எந்நாள் - எத்தனை நாள்கள் உண்டோ, அந்நாள் - அத்தனை நாள்களும், உன தாள் - உன் திருவடிகளை, பிடித்தே செல - பற்றிக்கொண்டே செல்லும்படி, காணே - நீ கடாக்ஷிக்கவேண்டும். நான் நிரந்தரமாய் உன் பக்தனாகவே அநுபவிக்கும்படி செய்.

4-ம் பாசுரம்.

செலக்காண் கிற்பார் காணு
மளவுஞ் செல்லுங்கீர்த்தியாய்
உலப்பி லானே யெல்லா வுலகு
முடைய வொருமூர்த்தி
நலத்தான் மிக்கார் குடந்தை கிடந்தா
யுன்னைக் காண்பானா
னலப்பா யாகாசத்தை நோக்கி
யழுவன் றொழுவேனே.

உரை:—செல்ல காண்கிற்பார் - நெடுந்தூரம் காணவல்ல மனிதரும் தேவரும், காணும் அளவும் - தங்கள் புத்தி யுக்திகளுக்கு ஏற்ப ஆராய்ச்சி செய்து நோக்குங்காலையில், செல்லும் - அவர்களுக்கும் எட்டாமல் கடந்து செல்கின்ற, கீர்த்தியாய் - புகழ்களையும் நற்குணங்களையும் உடையவனே, உலப்பு இல்லானே - குறைவென்பது ஒருபோதும் இல்லாதவனே, எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி - நிகரில்லாமல் ஏகமாய் எல்லா வுலகங்களையும் உனக்கு உடைமையாய்க் கொண்டவனே, நலத்தால் மிக்கார் குடந்தை கிடந்தாய் - நன்மையிற் சிறந்தவர் வசிக்கும் குடந்தையில் எல்லாருக்கும் அநுக்கிரக நிமித்தம் ஸேவை சாதிப்பவனே, உன்னை காண்பான் ஆகாசத்தை நோக்கி-மேலிருந்து எழுந்தருள்வாய் என்று உன்வரவைப் பார்த்து, தொழுவேன்-தொழுவேன், அழுவேன் - நீ வாராமையால் அழுவேன்.

5-ம் பாசுரம்.

அழுவன் தொழுவ னாடிக் காண்பன்
பாடி யலற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி
நாணிக் கவிழ்ந்திருப்பன்
செழுவொண் பழனக் குடந்தை கிடந்தாய்
செந்தா மரைக்கண்ணா
தொழுவ னேனை யுனதாள் சேரும்
வகையே சூழ்கண்டாய்.

பொழிப்புரை:–அழுது காண்பன், தொழுது காண்பன், ஆடிக் காண்பன், பாடிக்காண்பன், அலற்றிக் காண்பன், பின்னையும் நீவரக் காணேன், காணா தொழிந்தவாறே இந்த லோகத்தவர் உன் பக்கலிலே குணக்குறைவு சொல்லா நிற்கின்றார்களே யென்று அவர்களைப் பார்த்து வெட்கப்பட்டுத் தலையெடுக்க மாட்டாமலே இது என் பாபம் என்றிருப்பேன். செழுவொண் பழனக் குடந்தை கிடந்தவனே, செந்தாமரைக் கண்ணா, உன் திருவடிகளைச் சேர்வதற்கு ஒரு உபாயம் பார்த்தருளாய், என்கிறார்—ஆறாயிரப்படி.

பதக் குறிப்புக்கள் :—செழு - செழுமையான, வொண்-தேஜஸ்பொருந்திய, பழனக்குடந்தை-வயல்கள் சூழ்ந்த குடந்தை, தழு வல் வினையால் நாணிக் கவிழ்ந்திருப்பன் - என்னைத் தழுவி நிற்கும் கர்ம பய

னால் ஐயோ, பகவான் வரவில்லையே, பக்தனைக் கைவிட்டவனென்றும் தயையற்றவனென்றும் அவனை உலகத்தார் பலவிதபழிகளைச்சொல்லப்போகிறார்களே

என்று இலஜ்ஜையினால் அவமானம் பொறுக்க மாட்டாமல்தலைகுனிந்து வெட்கப்படுவேன். வகை - வழி- உபாயம் - விரகு. சூழ்கண்டாய் - ஆலோசித்துப்பார்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 3, களம் 3.

[619-வது பக்கத் தொடர்ச்சி]

[இடியும்மின்னலும்—ஹார்ப்பியின் உருவங்கொண்டு ஏரியல் வந்து, விருந்துபரப்பியிருந்த மேசையின்மீது தன் சிறகுகளைத் தட்டியவுடன் அவ்வுணவுகள் மறைகின்றன] (1).

ஏரியல்:—மூவர் நீவிர் பாவிகள்; இக் கீழுலகையும் அதன்கண் உள்ளவைகளையும் தனக்குக் கருவிகளாகக் கொண்ட விதியே, அடங்காப் பசியுடைய கடலும் உங்களைக் கக்கிவிடும்படி செய்தது. அதுவும் மனிதவாசமற்ற இத் தீவின்மேல்—மனிதர்க்கிடையே வாழ்வதற்கோ நீங்கள் சற்றேனும் தகுதியற்றவர்கள் (2). உங்களை நான் வெறியர்களாக்கிவிட்டேன்; இத்தகைய வீரமே கொண்டுதான் மனிதர் தங்களைத் தூக்கிலிட்டும் முழுக்கியுங் கொள்கின்றனர் (3)

[அலான்ஸோ, ஸபஸ்ட்டியன் முதலியோர் தங்கள் வாள்களை உருவுகின்றனர்.]

ஏ மூடர்காள், நானும் என்னுடன் சேர்ந்தவர்களும் விதியின் சேவகர்கள். உங்கள் கத்திகளைத் துவைத்திருக்கின்ற தாதுக்கள், என் சிறகின் ஒரு சிறு இறகைக் குறைக்குமாயின், இரைகின்ற காற்றைப் புண்செய்யவும், அல்லது, என்றுமென்றும் கூடிக்கொள்ளும் நீரினை எள்ளப்படும் குத்துக்களால் கொல்லவு மியலும். என் துணைச் சேவகர்களும் அன்னவாறே எய்யப்படுவதற் கியலாதவர்கள் (4). புண்தான் சில உங்களாற் செய்யக் கூடுமாயினும், உங்கள் கட்கங்கள் இப்பொழுது உங்கள் வலிமைக் கடங்காத கனம்பெற்றுத் தூக்கமாட்டாதன வாயின (5). மற்று இதுவே எனக்குஉங்கள்பால் உள்ளகாரியம்—நல்லோன்ப்ராஸ்ப்பீரோவை நீவிர் மூவிரும் மிலானிலிருந்து கொடுமைகள் செய்துஅகற்றிஅவனையும் அவன் பேதைப் பெண்ணையும், அதற்கிப் பொழுது பிரதிகாரஞ் செய்துவிட்ட, கடலின்மீது தீதுறப் போக்கியதை நினைவு கூர்ந்திடுவீர் (6). அந்தக் கொடுஞ் செயலுக்காக, மறத்தலின்றியே தாழ்ந்திருந்த தெய்வங்கள், கடல்களையும் கரைகளையும் மற்று மெல்லாவற்றையும் உங்கள் அமைதிக்குமாறாகச் சினங்கொளத் தூண்டியிருக்கின்றனர். (7) அவர்தம்மால் அலான்ஸோ, நீ, உன் மைந்தனை இழக்கலானாய். உடனே முடிகின்ற எவ்வகை மரணத்தையும்விடக் கொடியதாய் மெல்லமெல்ல வதைசெய்யும்படியான நாசமே உங்களையும் உங்கள் வழிகளையும் அடிதோறும் பற்றித் தொடருமாறு என்னைக்கொண்டு சாற்றுகின்றனர். (8). அவர்தம் வெஞ்சினத்தினின்று உங்களைக் காத்துக்கொள்வதற்கு, இதயமுற இரங்குதலும் தூயவாழ்க்கை இனித் தொடர்வதும் அன்றி வேறில்லை. அல்லாக்கால், தனிமிகப் பாழாய இத்தீவில் அது[illegible]வா உங்கள் தலைமேல் விழும்(9).

(1) ஹார்ப்பி-இதுவும், யூனிக்கார்ன், பீனிக்ஸ்போன்றவோர் கவிகற்பிதமான ஜந்து. பெரிய சிறகுகளும் வளைந்த நகங்களும் இதற்கு உண்டென்று கூறுவார். மிகப் பெரியவோர் பறவைபோல் தோன்றுமாம்.

அலான்ஸோவும் மற்றவர்களும் தம்முன் இருந்த விருந்தை உண்ணத் துவக்குமளவில், ஏரியல் ஹார்ப்பியின் உருவமெடுத்துவந்து, (மந்திரவாதிகள் வித்தை செய்வதன்முன் தம் கைகளைத் தட்டுவதுபோல்) உண்டி பரப்பியிருந்த மேஜையின்மீது தன் சிறகுகளைத் தட்ட, உணவுகள் மறைகின்றன.

(2) அடங்காப் பசியுடைய கடல் - எத்தனை எத்தனை தன்னுள் சேர்ந்தேலும் இன்னும் இன்னும் விழுங்க இடமுடைமையால் அடங்காப் பசியுடைய கடல் என்று அது அழைக்கப்பட்டது.

அக் கடலும் விழுந்த உங்களைத் தன் வயிற்றில் வைத்துக்கொள்ளாயல் கக்கிவிட்டதென்றால், இது விதியின் காரியமே யன்றி வேறன்று.

விதி, தன் காரியங்களை இப்பூமியில் அதிலுள்ள பொருள்களைக்கொண்டுநடத்துவதால், உலகமும் உலகப்பொருள்களும் விதியின் கருவிகள் என்று கூறப்பட்டன.

பாவிகளாகிய நீங்கள் மனிதர்க்கிடையே வசிக்கத் தகுதியற்றவர்களாதலால், மனிதநடமாட்டமற்ற இத்தீவில் உங்களை விதி ஒதுக்குவித்தது.

(3) இப்பொழுது அலான்ஸோ முதலியவர் பித்தர்போல் வெறித்த பார்வையுடன், ஏரியலை எதிர்ப்பதற்கு தம் வாள்களை உருவிக்கொள்கின்றனர்—

உங்கள் பாவங்களை எடுத்துரைத்த இதனால் நானே உங்களை வெறிகொளச் செய்தேன் என்கின்றது ஏரியல்.

நீங்கள் வாளைஉருவும்இது நிசமான வீரமன்று. கையறுநிலையுற்ற வொருவன் தற்கொலை செய்துகொள்வதற்கு வேண்டிய துணிவுபோன்றதே இது.

(4) காற்றும் நீரும் எப்படி உங்கள் வாளால் காயப்படமாட்டாவோ அப்படியே, நானும் என் துணைவர்களும் வாளால் எறிவதற்கு இயலாதவர். என் ஒரு சிறகையும் உங்களால் குறைக்கமுடியாது. ஆகையால் உங்கள் வாள் வீரத்தை வீணே காட்டப் புகாதீர்.

தாதுக்கள் - இரும்பு முதலிய உலோகங்கள். துவைத்தல் - உலோகங்களைக் காய்ச்சிப் பதம்செய்தல்.

எள்ளப்படும் குத்துக்கள் - நீரானது, தன்மேல் ஏவப்படுகின்ற குத்துக்களைப் பரிகசிப்பதுபோல், குத்தக்குத்த மீண்டும் மீண்டும் மூடிக்கொள்கின்ற தன்மை இங்குக் குறிக்கப்படுகின்றது.

(5) உஙகள் வாள்களைத் தூக்கவும் இப்பொழுது வலிமையற்றவர்களாகிவிட்டீர்—என்பது பொருள்.

(6) பிரதிகாரம் - செய்தவர்க்குச் செய்தபடி செய்தல். நீங்கள் ப்ராஸ்ப்பீரோவைக் கடல்மீது தீதுறப் போக்கினீர், அப்படியே அக் கடலானது இப்பொழுது உங்கள் கப்பலையுடைத்து உங்களுக்குத் தீதுசெய்தது—என்பது பொருள்.

(7) நீங்கள் ப்ராஸ்ப்பீரோவிற்குச் செய்த சதியைத் தெய்வங்கள் மறந்துவிடவில்லை,உங்களைத் தண்டிக்க இவ்வளவு காலம் தாழ்ந்திருந்தனர். இப்பொழுது,கடல் முதலியவைகளே உங்கள்மீது கோபம்கொண்டு உங்களைத் துன்புறுத்தும்படி செய்திருக்கின்றனர்.

[ஏரியல் இடியில் மறைகின்றான். பிறகு மெல்லிய இசைக்கிடையே அவ்வுருவங்கள் மீண்டும் வந்து, இகழ்ச்சியும் பரிகசமும் தோன்ற அபிநயித்து நடனம்செய்து மேஜையைத் தூக்கிக்கொண்டு போய்விடுகின்றன.](10)

ப்ராஸ்ப்பீரோ:—(ஏரியலுக்கு ஒரு புறமாய்) எனது ஏரியல், ஹார்ப்பியின் படிவத்தை நீ நன்கு நடித்தனை; புசித்தலின் அதற்கோர் நயமுடை அழகிருந்தது (11). யாது நீ சொல்லவேண்டுமென்று யான் கற்பித்திருந்தவைகளில் நீ ஒன்றும் குறைவுசெய்யவில்லை. அப்படியே, ஏனைய என் தாழ்ந்த ஆவிகளும் தத்தம் பாகங்களை, நல்ல உயிரோடு திருத்தமுற அரிதின் நடித்தன (12). உயர்ந்த வென் வித்தைகள் தம்முடை வேலையை நடத்துகின்றன. என் பகைஞர் இவர் அனைவரும் தம் மனக்கலத்தில் கட்டுண்டு கிடக்கின்றனர். இப்பொழுது அவர் என் வசத்தில் இருக்கின்றனர். இந்தக் கலக்கத்திலேயே அவர்களைவிட்டு நான், முழுகிப்போயினன் என்று அவர் எண்ணுகின்ற இளைஞன் பர்டினண்டையும் அவனுக்கும் எனக்கும் அருமையான செல்வியையும் சென்று காண்பேன் (13).

—[போகின்றான்]

கன்ஸாலோ:—தெய்விகம் வாய்ந்த வொன்றின் நாமத்தால் (14)—இந்த விபரீதப் பார்வையோடு ஏன் வெறித்து நிற்கின்றாய்.

அலான்ஸோ:—ஓ, இது கோரமானது, கோரமானது! கல்லோலமே எனக்கு அதனை எடுத்துச்சொல்லி பேசியதென்ன எண்ணினேன் (15). காற்றும் அதனை எனக்குப் பாடிக் காட்டிற்று. ஆழ்ந்தொலித்து அச்சந்தரும் வாச்சியக்குழலாம் இடியோ ப்ராஸ்ப்பரின் பேரினைப் பகர்ந்தது; என் குற்றத்தைக் குமுறியது அது (16). ஆதலின், அளறிலே வளர்த்தப்பெற்றான் என் மகன்; விழுதும் அளந்தறியா ஆழம்வரை அவனைத்தேடி அங்கு நானவனோடு புதைந்துகிடப்பேன் (17).

—[அலான்ஸோ போகின்றான்.]

ஸபஸ்ட்டியன்:—ஒன்றொன்றாக வரட்டும் பூதம், அதன்படை முழுவதும் பொருது தீர்ப்பேன் (18).

அன்டோனியோ:—நானுனக்குப் பின்னிற்பவனாக அமைவேன் (19).

[ஸபஸ்ட்டியனும், அன்டோனியோவும் போகின்றனர்.]

கன்ஸாலோ:—அவர் மூன்றுபேரும் ஒன்றற்கும் பின்னிடா வீண் துணிவுகொண்டிருக்கின்றனர். அவர் தம் பெரிய குற்றமானது, நெடுங்காலங் கழித்து ஏறும்படி கொடுத்தவொரு நஞ்சேபோல் அவர்களது உணர்வுகளை இப்பொழுது கடிக்க ஆரம்பிக்கின்றது. வேண்டிக்கொள்கின்றேன், என்னினும் இணக்கமுடைய கணுக்களுடையோர் அவர்களை விரைந்து தொடர்ந்து, இந்த அவசமுற்ற வெறியானது இப்பொழுது தூண்டவல்லதினின்று அவர்தமைத் தடுத்திடுங்கள் (20).

ஏட்ரியன்:—வாருங்கள் தயைசெய்து.

[போகின்றனர்.]

(8) நீங்கள் படுநாசமடைவீர்கள் என்று உங்களுக்கு விளம்பும்படி கடவுளர் என்னை அனுப்பியிருக்கின்றனர். எனினும், உடனே நீங்கள் மரணமடையும்படி செய்யாமல் நீங்கள் போகுமிடமெல்லாம் துன்பம் தொடர்ந்து வந்து, உயிர்போவதே நலமென்று எண்ணும்படி தயங்கித் தயங்கி உங்களை வருத்திக்கொண்டிருக்கும்.

(9) அவர்தம் - கடவுளர்களுடைய. அதுவோ-அக்கடவுளர் வெஞ்சினமோ, வெஞ்சினம்-கொடிய கோபம்.

இதயமுற இரங்குதல் - செய்த குற்றத்திற்காக மனப்பூர்வமாய் வருந்துதல்.

தூய வாழ்க்கை தொடர்தல் - இனியேனும் மாசற்ற வாழ்க்கை வாழ்தல்.

வேறு இல்லை - உங்களைக் கடவுளர் கோபத்தினின்று காத்துக்கொள்ள வேறு உபாயம் இல்லை.

(10) விருந்து மறைவதோடு இந்தப் பரிகசமும் நிகழ இருப்பதால்தான் முன், 'போகுங்கால் புகழ்' என்று ப்ராஸ்ப்பீரோ கூறினன்.

(11) வைத்திருந்தஉணவுகளை நீதான் உண்பதுபோல் மறைத்துவிட்ட பாவனையும் அழகாயிருந்தது - என்பது பொருள்.

(12) தாழ்ந்த ஆவிகள் - ஏரியலுக்கு அடுத்த நிலையிலுள்ள ஆவிகள். நல்ல உயிரோடு-மாயக் கூத்துப்போலல்லாமல், உயிர்வாழ்க்கையில் நிகழுமொரு உண்மைநிகழ்ச்சிபோல்.

(13) செல்வி - மிராண்டா.

(14) நாமத்தால் கேட்கின்றேன்—என்று முடித்துக்கொள்க. தெய்வ சம்பந்தமான ஒன்றன் திருநாமத்தை முன்னிட்டுக் கேட்கின்றேன்—என்பது பொருள். அரசனுக்குக் காப்பாக இது கூறப்பட்டது.

(15) கல்லோலம் - பெரிய அலைகள். அதனை - தான் செய்த குற்றத்தை.

(16) காற்று பாடியது என்றதற் கிணங்க, இடியென்னும் வாத்தியக்குழல் ப்ராஸ்ப்பீரோவின் பேரைப் பகர்ந்து தன் குற்றத்தைக் குமுறிக்காட்டியது என்கின்றான்.

(17) அளறு - கடலின் அடியிலுள்ள சேறு. விழுது - கடலின் ஆழத்தை அளக்கும் கருவி. நானும் கடலில் விழுந்து சாவேன்—என்பது கருத்து.

(18) ஸபஸ்ட்டியன் வீரவாதம் செய்கின்றான். இந்தப் பூதங்கள் திரண்டுவந்து எதிர்க்காமல் ஒவ்வொன்றாக வருமானால் தான் தனித்தனி பொருது அப்பூதப்படை அத்தனையும் வென்றுவிட இயலும் என்கின்றான்.

(19) இருவர் தனிப்போர் புரியும்போது ஒவ்வொருவனுக்கும் துணைவன் ஒருவன், போரில் கலவாமல், பின்னிற்கின்ற வழக்கம் மேனாட்டில் இருந்தது. பூதத்துடன் ஸ்பஸ்ட்டியன் புரியும் தனிப்போரில் தான் இவன் திறத்தில் பின்னிற்பவனாவனென அன்டோனியோ கூறுகின்றான்.

(20) கன்ஸாலோ வயதுமுதிர்ந்தவனாதலின், அவன் கால்களின் கணுக்கள் கடினமாகி, விரைந்து நடக்கமாட்டாமையால், இணக்கமுடைய கணுக்கள் உடையவர்களை ஏகும்படி சொல்கின்றான்.

அலான்ஸோ, ஸபஸ்ட்டியன், அன்டோனியோ ஆகிய மூன்று பேரும் தம் குற்றத்தால் உடைந்த மனத்தினராவதால், தம்வசமற்று, வெறிகொண்ட இந்நிலையில் எவ்வகை விபத்திற்கும் தம்மை ஆளாக்கிக்கொள்ளும் துணிவுடன் செல்லவே, அவர் தமக்குத் தீங்கொன்றும் செய்துகொள்ளாதபடி தடுக்கும்பொருட்டுக் கன்ஸாலோ மற்றவர்களை அவர்பின் அனுப்புகின்றான்.

மூன்றும் அங்கம் முற்றிற்று.

கலித்தொகை

[626-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 23

பொருளின்பொருட்டுப் பிரிய எண்ணிய தலைவன் தலைவிபால் ஒப்பற்ற அன்புகொண்டு ஒழுகுவா னாயினன். அவ் வொழுக்கக் குறிப்பால் அவன் பிரிவனோ எனத் தலைவி ஐயுற்றுவந்தாள்; ஒருநாள் புணர்ச்சியின் பின்னர் அவசத்துயிலில் அவன் அரற்றிய மொழிகளால் தனது ஐயம் தெளிவுற்றாள். பின்னர் அவள் தோழியை நெருங்கித் தலைவன் நீங்கின் தன்னுயிர்நீங்கும் என்னும் செய்தியை அவனுக்கு அறிவிக்குமாறு கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்கே யணங்காகு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானு
மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருண் முற்று மளவென்றா ராயிழாய்
தாமிடை கொண்ட ததுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலேமாயிற்
றொய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்

(வரி 1 - 17) இன் தீம் கிளவியாய் - மிக இனிமையாகிய சொற்களை உடைய தோழியே, நெஞ்சு நடுக்குற - (ஒருவர்தம்) மனம் நடுக்கமுறும்படி, கேட்டும் - (பலகாலும்) கேட்டும், கடுத்தும் - (கேட்ட அதனை உண்டோ இல்லையோ என்று) ஐயுற்றும், தாம் அஞ்சியது - தாம் அஞ்சியிருந்த காரியம், ஆங்கே அணங்காகும் - அவ்விதமே வருத்தத்தைத் தருவதாகும், என்னும் சொல் - என்னும் பழமொழி, மன்ற வாய் - மிகவும் உண்மை; (அஃது எங்ஙனம் எனில்,) நின் கேள் - நினது உறவினராகிய தலைவர், புதுவது பல் நாளும் பாராட்ட - புதியதொரு பொருளாகப் பல நாளும் என்னைப் பாராட்டுவதாலே, யானும் இது ஒன்று உடைத்து என எண்ணி - யானும் இப்பாராட்டுதல் ஒரு பிரிவை உடையது என்று கருதி, அது தேர - அப்பிரிவை ஆராயாநிற்க, மாசு இல் வண் சேக்கை - குற்றமற்ற பெரிய படுக்கையில், மணந்த புணர்ச்சியுள் - புணர்ந்த புணர்ச்சியிடத்தில், என் தோள் பாயல் கொண்டு - என் முலைகள் மேலே உறக்கங் கொண்டு, கனவுவார் - வாய் பிதற்றுகின்றவர், ஆய் கோல் நிரை தொடி - ஆராய்ந்தெடுத்த திரட்சி பெற்ற செறிந்த தொடியணிந்த, முன் கையாள் - முன் கையை உடையவள், கையாறு கொள்ளாள் - துன்பம் கொள்ளாதவளாய், இடு மருப்பு யானை - குத்தும் கொம்பினையுடைய யானைகள், இலங்கு தேர்க்கு ஓடும் - விளங்குகின்ற கானல்நீரை உண்மை நீரென்று நினைத்து அதனைக் குடிக்க ஓடுகின்ற, நெடுமலை வெஞ்சுரம் போகி - பெரிய மலைகளையும் கொடிய காடுகளையும் கடந்து போய், நடு நின்று - (போர் செய்ய எழுந்த இரு பெருவேந்தர்க்கும்) இடையே நின்று, செய்பொருள் முற்றும் அளவு - செய்யவேண்டுவதாகிய சமாதானத்தைச் செய்து முடித்து வருமளவும், கடி மனை காத்து ஓம்ப வல்லுவள் கொல் - (தனக்குக்) குறிக்கப்பட்ட இல்லறத்தைப் பெரிதுங் காக்கக் கூடியவளோ, என்றார் - என்று கூறினார், ஆயிழாய் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை உடையவளே, தாம் இடை கொண்டது - நம் காதலர் (நாம் கூடிவாழும் காலத்தின்) இடையே தம் மனத்திற் கொண்ட காரியம், அது ஆயின் - பொருள்வயிற் பிரிவாயின், தம் இன்றி யாம் உயிர் வாழும் மதுகை இலேம் ஆயின் - அவரைப் பிரிந்து யாம் உயிர்வாழும் வலி இலேமாயின், தொய்யில் துறந்தார் அவர் என - (அவள் மார்பில் தொய்யில் எழுதுதலை முன் நீங்காதவர் இப்பொழுது) எழுதாமல் அவளைத் துறந்தார் என்று, நொய்யார் நுவலும் பழி - அற்ப மகளிர் கூறும் பழி, தம் வயின் நிற்ப - தம்மிடத்தில் நிற்க, என் உயிர் தம்மொடு போயின்று சொல் - என்னுயிர் அவரோடு கூடப் போயிற்றென்று நீ அவரிடம் சொல்.

ஓகாரம் - அசை

காத்து ஓம்ப - ஒருபொருட் பன்மொழி.

போயின்று - னகரம் திரியாமல் நின்றது.

உயிர் நீங்குதல் உறுதியாதலின் இறந்தகாலத்தாற் கூறினள்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0



தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக	”	0-12-0
பிருங்காமலக	”	0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது)

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்டாலகஸ்

ஜ்வரேத்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

வர்த்தமானம்

அன்பு வளர்க்கும் முறை:—சீன தேசத்தின் முன்னேற்றத்திலே மனம்வைத்து முயலும் சீன அரசாங்கத்தார், சீனாவிலுள்ள சீன மாணவர்கள் எவரும், எழுதுகோல், பென்ஸல், பேப்பர், முதலியவைகளை களை வாங்குமுன் அவை சுதேச சாமான்களாவென்று பார்த்து வாங்கவேண்டுமென்றும், அப்படி யாராகிலும் அயல்நாட்டுச் சாமான்களை வைத்திருந்தால், அச்சாமான்கள் அவ்வப் பள்ளிகூட அதிகாரிகளால் பறிமுதல்செய்யப்படும் என்றும் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

* * *

20 கோடி பவுன்:—உலகத்திலுள்ள சமுத்திரங்களிலிருந்து வருஷம்ஒன்றிற்கு 20கோடி பவுன்பெறுமான மீன்முதலிய உணவுப்பொருள்கள் கிடைக்கின்றனவாம்.

* * *

கபீர்தாஸின் அருமை மொழி:—சிறந்த பக்தரான கபீர்தாஸ் கடவுளிடம் செய்துகொள்ளும் மனு பின்வருமாறு என்று ஓர் அறிஞர் எடுத்துக்காட்டுகின்றார். "தக்க காலத்தில் எல்லாம் வந்து சேரும். எதற்கும் மனிதன் முற்பட்டு முயல வேண்டா. தோட்டம் வைத்தவன் தண்ணீர் வார்க்கும் கடமையை உடையவன். நான் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பெறுவதற்கு ஒன்றுமில்லை. கடவுள், உப்பு காற்று ஜலம் காய்கறி பதார்த்தங்கள் பழம் ஆகிய உணவுப் பொருள்கள் நமக்கு அளித்துவருகின்றார். எனின், அவரைநான் வேண்டுவதாயிருந்தால்அதுவும்இதுவேதான்:—

கடவுளே, கருணை வள்ளலே, எனக்குத் தேவையொன்றும் அதிகம் இல்லை. எனக்கு நீ கொடுப்பதாயிருந்தால் என் குடும்பத்திற்கு எவை எவை யெந்த அளவில்தேவையோ, அவைகளைமட்டுமே அந்த அளவில் கொடுப்பாய், தேவைக்குமேல் ஒரு அணுக்கூட எனக்குவேண்டா. அப்படிக் கொடுக்கவேண்டுவதும், எனதும் எனது குடும்பத்தினதுமான பசிபாதைக்கு உரிய பொருள்தான்.

* * *

பச்சை நிற ஆடுகள்:—அமெரிக்காவில் ஒகிமோ என்னும் பிரதேசத்தைச்சேர்ந்த சிடாலியா என்னுமிடத்தில் இருக்கும் ஒருவகை ஆடுகளின் ரோமம் பச்சை நிறமுடையதாக விருக்கின்றதாம்.

* * *

நெப்போலியனின் காதற் கடிதங்கள்:—பிரஞ்சு தேசத்து சக்ரவர்த்தியாயிருந்த நெப்போலியன் எழுதிய காதற் கடிதங்கள் எட்டு அகப்பட்டனவாம். அக்கடிதங்களை லண்டனில் வசிக்கும் ஒரு செல்வர் 20-ஆயிரம் டாலர் கொடுத்து வாங்கியிருக்கின்றார் என்று தெரிகின்றது.

* * *

மாம்ஸபக்ஷணம் செய்யும் மலர்:—இலங்கையில் கண்டி என்னுமிடத்திற்கு அருகாமையில் உள்ள பேராதனைத் தோட்டத்தில் ஒரு மலர்ச்செடி யிருக்கின்றதாம். அச்செடியின் மலர் மிகப் பெரியதாகவும் அதிகவாசனை உடையதாகவும் இருக்கின்றதாம். அம்மலரதுவாசனைக்கும், தேன்வாடைக்கும் விரும்பி வரும் தேனீக்களையும் மற்ற வண்டுகளையும், அம்மலர் புசித்துவிடுகின்றதாம். ஏதாவது பூச்சிகள் வந்து உட்கார்ந்ததும் மலர் மூடிக்கொள்ளுமாம். மலர் மீண்டும் மலர்கின்றபொழுது பூச்சிகளின் சிறகு முதலியவைகள்தா னிருக்குமாம்.

* * *

பண்டமாற்று முறை:—தென்னமரிக்காவிலுள்ள பிரேசில் என்னும் நாட்டு அரசாங்கத்தார் 30-யுத்தக் கப்பல்களைச் செய்துதரும்படி ஜப்பானியரைக் கேட்டுக் கொண்டனராம். இந்த 30 கப்பல்களின் விலை 2 கோடிப் பொன் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த இரண்டு கோடிப்பொன்னிற்குப் பதிலாக, அத்தொகைக்குரிய காப்பிக் கொட்டையை பிரேஸில் அரசாங்கத்தார் ஜப்பானுக்குக் கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதாம்.

* * *

மீன் பண்ணை:—அமெரிக்காவில் மீன் ஆமை இவைகளை வளர்த்து வியாபாரம் செய்து வருகின்றார்கள். இதற்கென ஒரு பெரிய கம்பெனியும் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றதாம். இங்கே வளர்க்கப்படும் மீன்களும் ஆமைகளும் பாலையும் ஆரஞ்சு இரஸத்தையும் குடித்து வளர்கின்றனவாம். இக்கம்பனியார் வருஷந்தோறும் லக்ஷக்கணக்கான டாலர் பெறுமானமுள்ள மீன்களையும் ஆமைகளையும் விற்றுவருகின்றனராம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children. }

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 112, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!
ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)